பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 09 சனிக்கிழமை 25.09.2021 கதிர் 324

## இனிது ரகசியம் அல்ல!

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' – இது அடிக்கடி நான் என் பத்திகளில் குறிப்பிடும் வசனம்தான்.

ஆனால் இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்குப் போவோரை 'துரோகி' என்று பிரகடனப்படுத்துவோம் எனத் பக்கம்02

## மேலும் 82 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதற்கமைய 14

## மன்னாரில் திலீபனின் நினைவு நிகழ்வுக்கு தடைவிதிக்க மறுப்புத் தெரிவித்த நீதிமன்றம்

### சிவகரன் மீதான வழக்கு ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

மன்னாரில் நாளை 26ஆம் திகதி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளதால் இதற்குத் தடை உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் பொலிஸார் நேற்றுக் காலை வழக்குத் தாக்கல் செய்தனர்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ் சிவகரன் 14



## நேற்று தொற்று 1,332

இலங்கையில் மேலும் 1,332 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 14

# தமிழர் தாயக ஆக்கிரமிப்பை எடுத்துக்காட்டும் 'தாய் நிலம்' ஆவணப் படம் இன்று வெளியீடு!

## சம்பந்தன் – விக்கி கூட்டாக ஆரம்பித்து வைப்பர்

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு – கிழக்கில் காலம் காலமாக அரசுகள் மேற்கொண்டுவரும் நில அபகரிப்பை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டும் 'தாய்நிலம்: நில அபகரிப்பு – இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று' என்ற ஆவணப் படம் இன்று மாலை இலங்கை நேரப்படி 5.30 மணிக்கு (இலண்டன் நேரம் பிற்பகல் 1.00 மணி, டொரண்டோ மற்றும் நியுஜேர்சி நேரம் காலை 8 மணி) திரையிடப்படவுள்ளது. 11



## அராலியில் நேற்றிரவு விபத்து; மூவர் காயம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்கு பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, 14



## வடக்கு - கிழக்கு தமிழ் எம்.பிக்களை ஒன்றிணைக்கும் முயற்சி ஆரம்பம்!

வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் பொது முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி கி. நோயெல் இம்மானுவேல், தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரால் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இவ்விருவராலும் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடக்கு – கிழக்கைப் பிரதேசவாரியாகவும் தேசியப்பட்டியலூடாகவும் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இயன்றவரை ஒன்றிணைந்து ஈழத்தமிழர்களின் கூட்டு உரிமை சார்ந்த நிலைப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இது தொடர்பில், கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை 14

## 'செப். 11 தாக்குதல்' நினைவேந்தலில் கோட்டா



அமெரிக்காவின் வொஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களை இலங்கு வைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களின் 20 வருடப் பூர்த்தியையொட்டி, அமெரிக்காவின் மன்ஹட்டனில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நினைவேந்தல் நிகழ்வில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதியன்று, நியூயோர்க் நகரில் அமைந்திருந்த உலக வர்த்தக மையம் மற்றும் வொஷிங்டனின் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் 14

## மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குள் திலீபனை நினைவேந்தத் தடை!

(வவுனியா நிருபர்)

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தியாக தீபம் திலீபனை நினைவுகூர முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த தடை உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் என்பவர் தொடர்பில் நினைவுகூரல் நிகழ்வை நடத்தவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என மாங்குளம் பொலிஸார் அறிக்கை செய்துள்ளனர்.

எனவே, பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீங்களும், 14

## வெள்ளை மாளிகையில் பைடன் - மோடி சந்திப்பு



அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு ஜனாதிபதி 14

## தமிழர் தரப்பு ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படுவது ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சிக்கு வலுச் சேர்க்கும்

### ரெலோப் பேச்சாளர் சுரேந்திரன் அறிக்கை

தமிழ்த் தரப்பின் ஒருமித்த நிலைப்பாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சிக்கு வலு சேர்க்கும் என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் நேற்றுத் தாம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

தம்மை 'ஊடகப் பேச்சாளர் – ரெலோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு' என்று குறிப்பிட்டு அவர் விடுத்துள்ள அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

எமது இருப்பை ஒட்டுமொத்தமாக துடைத்து அழித்து விடக்கூடிய பாரிய நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து நிற்கும் நமது இனத்தை காக்க வேண்டிய கடமை எமது 14



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசியக் கட்சியின் பிரமுகர் சிவாஜிலிங்கம் நேற்று அறிவித்தமையைக் கேட்டவுடன் வாசகர்களே இந்த 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்ற வாசகத்தைத் தங்களுக்குள் முணுமுணுத்திருப்பர் என்பது நிச்சயம்.

கோட்டா அரசு தமிழ்க் கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்தால், அதில் சம்பந்தனும், சுமந்திரனும் முன்னுரிமை எடுத்து, காரியமாற்றி, 'ஸ்கோர்' பண்ணி விடுவார்கள், அவர்களுக்கு முக்கியத்துவம் கிடைத்து விடும், அதற்குத் தடுக்குப் போடுவதற்காகக் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகள் – குறிப்பாக ரெலோ – முன்நிபந்தன விதிக்கின்றோம் என்ற சாக்கில் தடைக் கல்லைப் போடத் தயாராகின்றது என இவ்வாரம் முற்பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். புளொட் மற்றும் விக்கி, சுரேஷ், ஶ்ரீகாந்தாவின் கட்சிகளுடன் இணைந்து ரெலோ அதற்கான வியூகம் வகுத்து, சதித் திட்டம் தயார் செய்து உள்ளது என்ற உண்மையை நான் போட்டுடைத்து அம்பலப்படுத்தியிருந்தேன்.

அதை வாசித்து விட்டு, முழுத் தெளிவோடு கடந்த புதன்கிழமை கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்துக்கு வந்தார் சம்பந்தன். எனது பத்தி ஊடாகத் தங்களின் சதி நகர்வுத் திட்டம் சம்பந்தனுக்குத் தெரிய வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்ட ரெலோவினர் அந்தக் கூட்டத்தில் பம்மினர்.

"ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம் முடிந்து நாடு திரும்பியதும் ஜனாதிபதி கோட்டாபய பெரும்பாலும் எங்களை (கூட்டமைப்பை) பேச்சுக்கு அழைக்கக் கூடும். அதற்கான அழைப்பு ஏற்கனவே நிலுவையில் உள்ளது. நாங்கள் திறந்த மனதோடு பேசப் போகவேண்டும். பேச்சு மேசையில் நாங்கள் பல விடயங்களை முன் வைக்கலாம்" – என்று அங்கு குரலை உயர்த்தி அடித்துக் கூறினார் சம்பந்தன். யாரும் ஏதும் கூறவில்லை. வாயடைத்து இருந்தது செல்வம் அணி.

விக்கி – சுரேஷ் – ஶ்ரீகாந்தா அணியுடனும் புளொட்டுடனும் சேர்ந்து அரசுடனான எந்தப் பேச்சுக்கும் முன் நிபந்தனை விதிக்க வேண்டும் என்று வெளியில் ஆரவாரமாகத் தயாரான செல்வம் கூட பம்மிப் பதுங்கிக் கொண்டார்.

பேச்சுக்கு நிபந்தனை விதிக்க வேண்டும் என்ற பேச்சை சம்பந்தனின் முன் எடுத்தால், முதல் நாள் என் பத்தியில் குறிப்பிட்ட சதித் திட்ட விவகாரம் உண்மையாகி விடும் என்பதால் – அந்தத் திட்டம் பற்றிய குட்டை முதல் நாள் நான் அம்பலப்படுத்தியமையால் – வேறு வழியின்றி அன்று ரெலோ பதுங்கிக் கொண்டது.

சந்தர்ப்பம் வரும் போது, பேச்சுக்கு நிபந்தனை விதிக்கும் சதித் திட்டத்தைக் கட்டவிழ்க்கலாம் என்றுதான் ரெலோ காத்திருக்கின்றது. சம்பந்தன் – சுமந்திரன் முயற்சிக்குக் கால்தடம் போடுவதன் மூலம் தாங்கள் அரசியலில் மேலெழலாம் என்பதுதான் – என்பது மட்டும்தான் – இந்தக் குயுக்தித்தனத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் ஒரே நோக்கம். தமிழ் மக்கள் நலன் அல்ல.

வல்வை நகர சபைத் தலைவர் தெரிவிலும் பிற விடயங்களிலும் ரெலோ வுடன் திரும்பவும் பின்கதவால் ஐக்கியமாகியிருக்கும் சிவாஜிலிங்கம், சம்பந்தன் – சுமந்திரனுக்கு எதிரான ரெலோவின் சதித் திட்டத்தை இப்போது தமது தோளில் ஏற்றுக் காய் நகர்த்தத் தொடங்கியிருக்கின்றார். அந்த அறிவிப்புத்தான் அரசுடன் நேரடிப் பேச்சுக்குப் போவோரை 'துரோகிகள்' என்று பிரகடனப்படுத்தும் சிவாஜியின் நடிப்பு வேஷம்.

'துரோகிகள்' பட்டியலில் இருந்து ஒருவாறு தங்கள் பெயரை விடுவித்துக் கொண்டாயிற்று என்ற நம்பிக்கையில், அடுத்த தரப்புக்கு 'துரோகி' பட்டம் சூட்டத் தயாராகின்றார் சிவாஜி.

சுரேஷ், விக்கி, ஶ்ரீகாந்தா, கஜேந்திரகுமார் தரப்புகளும் அரசுடன் பேசப் போவோருக்கு இந்தத் 'துரோகி' பட்ட அறிவிப்பை, சிவாஜியைத் தொடர்ந்து விட்டாலும் விடலாம். பார்த்திருப்போம்.

அரசு – ஜனாதிபதி – நேரடிப் பேச்சுக்கு அழைப்பு விடுத்தால், நிபந்தனை விதித்து, அதைக் குழப்பி விட்டு, அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது, மாற்று வழித் திட்டமாக என்ன வைத்திருக்கின்றார் சிவாஜி என்பதுதான் கேள்வி.

சந்திக்குச் சந்தி, ஓடி ஓடி, விளக்கும், கற்பூரமும் கொளுத்தும் 'ஸ்டண்ட்' அரசியல் மூலம் தீர்வு வந்து விடும் என்று அவர் நம்புகின்றாரோ என்னவோ...!

இத்தகைய சின்னத்தனமான அரசியல் காரணமாக – அரசியல் குளறுபடிகள், அறிவிப்புகள் காரணமாக – தமிழ்த் தேசிய அரசியல் எடுப்பார் கைப்பிள்ளை விவகாரமாகி, கேவலப்பட்டுப் போனதுதான் மிச்சம்.

இனி, அடுத்த விடயத்துக்கு வருவோம். 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் வேலை' என்பார்களே. அப்படி ஒன்றைச் செய்ய முற்பட்டிருக்கின்றார் ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன்.

வழமைபோல, தாம் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் என்பதுடன் 'ஊடகப் பேச்சாளர் – ரெலோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்று குறிப்பிட்டு, அப்படிக் குறிப்பிடுவதன் மூலம் கூட்டமைப்பு தங்களின் (ரெலோவின்) கைகளிலும்தான் உள்ளது என்று மக்களுக்கு நினைப்பூட்டிச் சுட்டிக்காட்டுகின்றார் என்ற சுய மனத் திருப்தியுடன், அவர் நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

'தமிழ் தரப்பின் ஒருமித்த நிலைப்பாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சிக்கு வலு சேர்க்கும்' – என்ற தலைப்பில் அது வெளி வந்திருந்தது.

"எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு தமிழர் தரப்போடும் கலந்துரையாடுவதற்கு ஆயத்தமாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது." – என்று சுரேந்திரன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த ஒன்றிணையுமாறு அனைத்துத் தமிழ்த் தரப்பினருக்கும் அழைப்பு விடுகின்றோம்." – என்றும் அவர் அதில் தெரிவித்திருக்கின்றார். (சுரேந்திரனின் முழு அறிக்கை பிறிதொரு பக்கத்தில் முழுமையாகப் பிரசுரமாகியுள்ளது.)

சுரேன் குருசாமி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கும் அளவுக்கு அத்தகைய என்ன சந்திப்புக்கு ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியிருக்கின்றது என்று தேடிப் பார்த்தேன். அப்போதுதான் 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும்' அவரின் முயற்சி பற்றிய விடயம் தெரியவந்தது.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் வரும் 27ஆம் திகதி கொழும்பு வருகின்றார்கள்.

கடந்த வாரம் ஐரேப்பிய ஒன்றியத்தின் கொழும்புத் தூதுவர் கொழும்பில் சுமந்திரன் எம்.பியைச் சந்தித்து இரண்டு மணி நேரம் உரையாடியிருந்தார். அப்போது கொழும்பு வரும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை சம்பந்தனைச் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு தூதுவர் தரப்பு சுமந்திரனிடம் கேட்டது எனத் தெரிய வந்து.

சம்பந்தன் ஐயா வெளியில் யாரையும் சென்று சந்திக்கும் நிலையில் இல்லை என்று சுமந்திரன் கூறியிருக்கின்றார்.

இல்லை, எமது குழு சம்பந்தன் ஐயாவை அவர் வீட்டிலேயே தேடிச் சென்று சந்திக்கும், அதற்கு சம்பந்தன் ஐயாவிடம் இணக்கம் கேட்டுச் சொல்லுங்கள் என்று தூதுவர் தரப்பில் சுமந்திரனுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அதன் பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தூதுவர்அலுவலகத்தில் இருந்து சம்பந்தனுக்கு ஓர் அழைப்பு வந்தது.

கொழும்பு வரும் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு, சம்பந்தனையோ அப்படி இல்லாவிட்டால் சம்பந்தன் – சுமந்திரன் ஆகிய இருவரையுமோ, அது சரிவராவிட்டால் குறைந்த பட்சம் சுமந்திரனை மட்டுமாவது சந்திக்க விரும்புவதான அழைப்பு எழுத்தில் சம்பந்தனுக்கு வந்தது.

சம்பந்தன் சந்திப்பாராயின் ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.15 மணிக்கு சம்பந்தன் வீட்டில் அவரைத் தேடி வந்து சந்திக்கும் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

அதையடுத்து,

☞ 11

Personal English Classes



K Ganesh (BA.Pera)
இந்த வகுப்புகளில் படிப்பவர், திரும்ப ஒரு ஆசிரியரை தேட தேவையில்லை.
Grammar, Fluent Spoken
Grade 7 - பட்டதாரிகள், including English Medium, தொழில் புரிவோர்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் — 1944 — 08 — 02



மறைவு — 2021 — 08 — 27

### அமரர் சின்னத்தம்பி சிவநேசன்
(சிரேஷ்ட சட்டத்தரணி)
திதி – சஷ்டி

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம்வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே
இப்பாரினில் எம்மை பரிதவிக்கவிட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் தந்தையே

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் சின்னத்தம்பி சிவநேசன் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல், சமூகவலைத் தளங் கள் ஆகியவை மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எங்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (நாளை) 26.09.2021 அன்று அன்னாரின் இல்லத்தில் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மிக எளிமையாகவும் அமைதியாகவும் நடாத்தவிருக்கின்றோம் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தகவல்:- பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**
**0773754243 புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road, Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

காலைக்கதிர் Kalaikkathir

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 20 நிகழ்வு நாளை (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் 'நாடகங்களில் மொழி' என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார்.

ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள் குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



# மகனின் விடுதலைக்காக நாமலிடம் கதறியழுத தாய்!

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுதலை செய்யுமாறு கோரியும், உடனடியாக இதற்குத் தீர்வு ஒன்றை சொல்லிவிட்டு போகுமாறும் தாயொருவர் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கண்ணீர்விட்டு அழுத சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனைவிடுவிக்குமாறும்குறித்த தாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு – வந்தாறுமுலையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாமல் கலந்து கொண்டிருந்த போதே மேற்படி தாய் தனது மகனுக்கான தீர்வை இந்த இடத்திலேயே பெற்றுத் தந்துவிட்டுப் போகுமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதி குடும்பத்துக்கு ஆஸியில் இடைக்கால வீசா!

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில், நாடு கடத்தலை எதிர்நோக்கியும் நீதிமன்ற உத்தரவு காரணமாக ஆஸ்திரேலியாவில் தொடர்ந்தும் தங்க வைக்கப்பட்டுள்ள, இலங்கைத் தமிழர்களான பிரியா –நடேஸ் மற்றும் அவர்களது மூத்த மகள் கோபிகாவிற்கு ஆஸ்திரேலிய, குடிவரவு அமைச்சர் அலெஸ் ஹாவ்க் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி, 12 மாத இடைக்கால பிரிட்ஜிங் வீசாவை வழங்கியுள்ளார்.

எனினும் அவர்களது இளைய மகள் தருணிக்கவிற்கு வீசாவை அவர் வழங்கவில்லை. இதன் காரணமாக அந்தக் குடும்பத்தினர் அனைவரும் பெர்த் நகரில் சமூகக் காவலில் உள்ளனர் என எஸ்.எம்.எஸ். செய்திச் சேவை தெரிவித்துள்ளது. இந்தக் குடும்பம் குயின்ஸ்லாந்து மாநிலத்தின் பிலோயெலா நகருக்குத் திரும்பக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காக தருணிகா–விற்கு வீசா வழங்கவில்லை என்று இந்தக் குடும்பத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்கள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

தருணிகாவின் பெற்றோர்கள் பிரியா, நடேஸ் மற்றும் அவரது மூத்த சகோதரிகோபிகா ஆகியோருக்கு மூன்று மாத இடைக்கால வீசா வழங்குவதற்கு, அமைச்சர், பிராந்திய வலய நீதிமன்றில் உறுதியளித்தார்.

பிரியா–நடேஸ் ஆகியோருக்கு ப்ரிட்ஜிங் விசாவை புதுப்பிக்க அமைச்சர்கொள்கையளவில் ஒப்புதல் வழங்கிய போதும், தற்போது அமைச்சரின் முடிவு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. இவர்கள் நான்கு பேருக்கும் வீசா வழங்குவதற்கு அமைச்சரிடம் அதிகாரம் இருக்கிறது.

ஆனால் மூவருக்கு வீசா வழங்கிவிட்டு, சிறுமி தருணிகா–விற்கு மட்டும் வீசா வழங்காமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது என்று அவர்களது குடும்ப நண்பரும் நீண்ட நாள் ஆர்வலருமான ஏஞ்சல் பிரடெரிக்ஸ் கூறியுள்ளார். கோபிகா மற்றும் தருணிகா இருவருமே குயின்ஸ்லாந்தில் பிறந்தவர்கள். இருவருமே பிலோயெலா நகருக்குச் செல்வதையே விருப்பமாகக் கொண்டுள்ளார்கள். இந்நிலையில் பிரியா–நடேஸ் குடும்பம் தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டு பிலோயெலா திரும்ப வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்க தூதுவரை கவர்ந்த 'மெனிகே மகே ஹிதே' பாடல்!

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எலைய்னா பி டெப்லிட்ஸ், இலங்கைப் பாடலான மெனிகே மகே ஹிதேவின் வயலின் பதிப்பைக் கேட்டு மகிழ்ந்தேன் எனக் கூறியுள்ளார்.

கலிபோர்னியாவின் தெருக்களில் கரோலினா ப்ரோட்சென்கோ என்பவர் வாசித்த வயலின் பதிப்பு, இசை என்பது உலகளாவிய மொழி என்பதற்கு ஒரு சான்று என்று தூதுவர் டுவீட் செய்துள்ளார்.

யுக்ரேனிய நாட்டைச் சேர்ந்த புரோட்சென்கோ தனது யூடியூப் அலைவரிசையில் ஒரு காணொளியை வெளியிட்டுள்ளார், அதில் 'மெனிகே மகே ஹிதே' என்ற பாடலுக்குத் தாம் வயலின் வாசிப்பதை அவர் பதிவிட்டுள்ளார்.

யோஹானி மற்றும் சதீனின் மெனிகே மகே ஹித்தேயின் வயலின் அட்டைப் பாடல் என்று அவர் ஒரு செய்தியை அதில் வெளியிட்டுள்ளார். யோஹானி மற்றும் சதீனின் மெனிகே மகே ஹிதே தற்போது உலக தரவரிசையில் முதல் 10 இடங்களில் உள்ளது.

இந்த வாரம் யூடியூப் உலக தரவரிசையில் இலங்கைப் பாடல் 7 ஆவது இடத்தில் உள்ளது. அத்துடன் யோஹானி மற்றும் சதீனின் 'மெனிகே மகே ஹிதே' யூடியூபில் 11.9 கோடி பார்வைகளைப் பெற்றுள்ளது.

நடிகர் அமிதாப் பச்சன் இந்தப் பாடலின் ஹிந்தி பதிப்பிற்கு நடனமாடும் காணொலியை பகிர்ந்து இந்தியாவின் கவனத்தை ஈர்த்த பிறகு இந்தப் பாடல் உலகம் முழுவதும் பெரும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஞானசாரதேரர் மன்னார் விஜயம்



மன்னார் – மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோயில் மோட்டை பகுதிக்கு கடந்த புதன்கிழமை மாலை பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோயில் மோட்டை பகுதியில் சுமார் 40 வருடங்களாகக் கோவில் மோட்டை பகுதி மக்கள் விவசாயம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த அரச காணியை தங்களுக்கு வழங்க வேண்டும் என கோவில் மோட்டை விவசாயிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டதோடு, பல போராட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த நிலையில், வட மாகாண ஆளுநர் குறித்த காணியைக் கோயில் மோட்டை விவசா–யிகளுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் அந்தக் காணி தங்களுக்கு வேண்டும் என மடு தேவாலய பரிபாலன சபையினர் கோரி வந்தமையுடன் மேற்படி காணியைப் பெற்றுக்கொள்ள பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கொவிட் இல்லாத இலங்கை உருவாக வேண்டும் என புதன்கிழமை மாலை இடம்பெற்ற விசேட பூஜையில் பங்கேற்பதற்காக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

மன்னார் வந்த நிலையில் இடைவழியில் வழி மறித்த கோயில் மோட்டை விவசாயிகள் தங்களின் காணி பிரச்சினையைத் தீர்த்துத் தருமாறு கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் கோயில் மோட்டை வயல் காணிக்கு பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அதைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் –

தேவாலயங்களுக்குக் காணிகளை வழங்குவதை விட மக்களின் பசியைத் தீர்ப்பதே முக்கியம் என தெரிவித்தமையுடன், குறித்த காணியைக் கோயில் மோட்டை விவசாயிகளுக்குப் பெற்றுத்தர தன்னால் இயன்ற நடவடிக்கையைத் தான் எடுக்கிறோம் எனவும் உறுதியளித்தார்.


## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 65 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (O +அல்லது or O -) அவசர மாகத் தேவை. தானம் செய்ய விரும்புபவர்கள் குடிப்பழக்கம், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருக்கவேண்டும். HLA report வைத்திருப்பவர்கள் அவசரமாக தொடர்புகொள்ளவும்.

தொடர்புக்கு - 077 576 6961


# இலங்கை வாழ் தமிழர்களின் பொதுக் கொள்கை வெளியீடு

இலங்கைத் தமிழர்களின் பொதுக் கொள்கைகள் பற்றிய விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் புலம்பெயர் அமைப்புகளின் கையொப்பமிடப்பட்ட தமிழர்களின் பொதுக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் நடத்தப்பட்ட மற்றும் கண்காணிக்கப்பட்ட வாக்கெடுப்பிற்கு அமைய இந்தத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு –

இலங்கையில் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் மற்றும் அவர்களின் சந்ததியினருக்கு ஒரு ஜனநாயக, அமைதியான, நிரந்தர மற்றும் அரசியல் தீர்வு காண அனுமதிப்பது தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிக்கு ஓர் இடைக்கால சர்வதேசப் பாதுகாப்பு பொறிமுறையை முன்னெடுத்தல், இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை ரத்து செய்தல், இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் போன்ற விடயங்களுக்காக இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும், இனப் படுகொலை மற்றும் சித்திரவதைக்கு எதிரான மாநாட்டிலும் பரிந்துரைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் அமெரிக்க அரசுடன் பேசுவதற்கான பொதுக்கொள்கைகளை அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஆறு அமைப்புகள் வரையறுத்துள்ளன.

அமெரிக்க அரசுக்கு அழுத்தம்கொடுப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சுடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதோடு இந்தச் சந்திப்பு விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இனிவரும் காலங்களில் இலங்கை அரசு மற்றும் சர்வதேச நாடுகளுடன் பேசப்படும் பேச்சுக்களின் போது மேற்குறிப்பிட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையிலேயே பேச வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## இது, பொலிஸ் அராஜகம்

கோட்டாபய ஆட்சிப் பீடத்தின் பௌத்த, சிங்கள மேலாண்மை இனவெறிப் போக்கின் மற்றொரு கோர முகம் நேற்றுமுன்தினம் நல்லூரில் தியாகி திலீபனின் தூபி அருகே அரங்கேறியது.

நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் சபை அமர்வுகளும், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது –

இத்துணை கமராக்கள் சூழவிருந்து படம் எடுப்பது தெரிந்திருந்தும் –

ஓர் எம்.பியை இப்படி மோசமான முறையில் கையாளும் திமிர் சிங்களப் பொலிஸாருக்கு இருக்கும் என்றால் அதற்கு கோட்டா அரசின் பௌத்த, சிங்கள மேலாண்மை வெறித்தனத்தினால் வந்த உந்துதலின்றி வேறு காரணமில்லை என்பதை அடித்துக் கூறலாம்.

மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் போல ஸ்ரீலங்கா பாதுகாப்புத்துறையின் காவலர்களை – ஏவலர்களை – தன்னுடைய பாதுகாப்புக்குப் பெற்றவரல்லர் செ.கஜேந்திரன் எம்.பி. பந்தா இல்லாமல் தனித்தே எல்லா இடங்களுக்கும் சென்று வருபவர்.

அதற்காக அவரை பல நூறு பேர் பார்த்திருக்க, பல நூறு கமராக்கள் மூலம் உலகத் தமிழினமே நோக்குகையில், யாழ்ப்பாணம் பொலிஸ் அடாவடித்தனமாக நடத்தியது என்றால், அது தனி ஒரு தமிழ் எம்.பி. மீதான அராஜகம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழினம் மீதான அடக்குமுறை அட்டூழியம்தான்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் சுட்டிக்காட்டியபடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிடும் உள்நாட்டு நீதிப் பொறிமுறை இதுதான். அந்தக் கேலிக் கூத்து இப்படித்தான் இருக்கும்.

திலீபன் நினைவு நாளுக்கு விழுந்தடித்து தடை உத்தரவுகளை பொலிஸ் கோரிக்கையின் பேரில் வாரி வழங்கும் நீதிமன்றங்கள், இத்தகைய பொலிஸ் அராஜகங்களையும் அதே விசேட கவனத்தை எடுத்து நோக்க வேண்டும். இல்லையேல் இத்தகைய பொலிஸ் அராஜகங்கள் கேட்பார் தடுப்பாரின்றி தாராளமாகத் தொடர்ந்து நிகழும். நீதித்துறை மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் அவநம்பிக்கை மேலும் வளரும்.

கஜேந்திரன் எம்.பி. சம்பவ இடத்துக்குத் தனிய வந்து, தனித்து கற்பூரம் ஏற்ற முனைந்தார். ஆள்களைத் திரட்டி, திமிர் கொண்டு நடந்து, அதனை கொவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் திருப்பியது பொலிஸ் அராஜகம்தான்.

அது மாத்திரமல்ல, உயிரிழந்த ஒருவரைத் தாம் நினைவு கூர்ந்து, அவரின் நினைவு நாளில் கற்பூரம் ஏற்றுவது தவறு என்றால், அந்தத் தவறு தொடர்பான நீதிமன்றத் தடை உத்தரவைக் காட்டுங்கள் என்றுதான் கஜேந்திரன் கேட்டார். நியாயமான கேள்வி. அதற்குப் பதிலளிக்க இயலாத பொலிஸ் அராஜகம் பண்ணியது.

பொலிஸின் இந்த அத்துமீறலுக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்படும் எனக் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முடிவு செய்துள்ளார். கட்சி வேறுபாடுகளைக் களைந்து மூத்த – திறமையான – சட்டத்தரணிகள் எல்லோரும் தமிழினத்துக்கு எதிரான இந்த பொலிஸ் அராஜகம் தொடர்பில் தமது காத்திரமான பங்களிப்பை நல்க முன்வர வேண்டும்.

இதைத் தனி ஒரு கட்சியின் எம்.பிக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியமாக நோக்காமல் ஒட்டுமொத்த இனத்தின் மீதான அடாவடித்தனத்தின் குறியீடாகக் கணித்து சட்டத்தரணிகள் ஒன்றிணைய வேண்டும்.

# 60 வருடமாக தமிழர்களை ஏமாற்றியவர்கள் விமர்சிப்பதையே வழக்கமாக கொண்டுள்ளனர்

### பிரசாந்தன் சாட்டை




60 வருடமாக தமிழர்களை ஏமாற்றியவர்கள் இன்று அரசாங்கத்தை விமர்சிப்பதை மட்டுமே வழக்கத்தில்கொண்டுள்ளனர் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட விளையாட்டு மைதானங்களை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த விளையாட்டு மைதானங்களை கையளித்தார். இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்களோ அதனை தாங்களாக உணர்ந்து செய்கின்ற தலைமைத்துவத்தை இந்த நாடு பெற்றிருக்கின்றது. இதனை விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டே இருக்கட்டும்.

62 வருடங்களாக விமர்சித்தோம் என்ன நடந்தது? இன்னும் விளையாடுவதற்கு கோட்டைக்கல்லாறில் விளையாட்டு மைதானம் இல்லாமல் இருக்கின்றோம்.

கடந்த காலத்தில் போர்க்களத்தில் போராடிய பல இளைஞர்கள் இன்று தங்களது வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதற்குப் போராடி வருகின்றனர். அவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக மாற்றவேண்டும். இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை வலுப்படுத்த வேண்டும்.

இன்று அடிப்படை வசதிகளற்றுள்ள மக்களின் எதிர்காலத்தையும் அவர்களின் தேவையையும் நிறைவேற்றி அவர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்காக எதிர்காலத்தில் இந்த நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய, எதிர்காலத்தின் ஜனாதிபதியாக வரக்கூடியவர்.அவர்களின் கரங்களைப் பலப்படுத்திக்கொண்டு கிழக்கு மாகாணத்தை வலுப்படுத்துவதற்கு எல்லோரும் இணைந்து பாடுபடவேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# யாழ்.போதனா கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு றோட்டறி மற்றும் இன்னர்வீல் கழகங்கள் உதவிகள்



யாழ்ப்பாணம், செப்.25

யாழ். போதனா வைத்தியசாலையின் பரிபாலனத்துக்கு உட்பட்ட கொரோனா சிகிச்சை நிலையங்களின் பாவனைக்கென ஒரு தொகுதி முகக்கவசங்கள் மற்றும் நோயாளர்களுக்கான யோக்கட், பழங்கள் உட்பட சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) வைத்தியசாலைப் பணிப் பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பு மத்தி றோட்டறிக் கழகத் தலைவர் றொட்டேறியன் அபயன் விநோதன் மற்றும் கொழும்பு நகர் மத்தி இன்னர்வீல் கழகத் தலைவர் திருமதி ஜெயந்தி விநோதன் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபனால் இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இதன்போது, கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், போதனா வைத்தியசாலை திட்டமிடல் வைத்திய அதிகாரியுமான மருத்துவர் எஸ். சிவபாதமூர்த்தி, போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களான மருத்துவர் எஸ். யமுனாநந்தா, எஸ். சிறிபவானந்தராஜா, கணக்காளர் எஸ். பிரசாத் மற்றும் யாழ்பாணம் றோட்டறிக் கழகம், சுன்னாகம் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கை - ஆஸ்திரேலியா முக்கிய சந்திப்பு



பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முகமாக இலங்கைக்கான ஆஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் அமண்டா ஜுவல் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுரவிலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தில் மேற்படி சந்திப்பு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது அமண்டா ஜுவல், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் உயரதிகாரியுடன் இரு தரப்பு முக்கியத்துவம் மற்றும் பிராந்திய பாதுகாப்பின் ஸ்திரத்தன்மையைப் பராமரிக்க மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மேலும், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இந்த நோக்கத்துக்காக அனைத்துப் பிராந்திய நாடுகளுடனும் இலங்கை முழு ஒத்துழைப்பை வழங்கும் என பாதுகாப்பு செயலாளர் உறுதியளித்தார்.

இதேவேளை, இரு தரப்பினரும் தற்போதுள்ள பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக உறுதியளித்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் - 86**

**ந.வித்தியாதரன்**



சிவநாயகம் ஐயாவைப் போல என்னை இத்துறையில் வளர்த்துவிட்ட மற்றைய இருவர் குறித்து குறிப்பிட்டு வந்தேன். ஒருவர் கே.கே.இரத்தினசிங்கம் - தினபதி துணை ஆசிரியராக இருந்தவர். மற்றவர் ம.வ.கானமயிலநாதன் - தினபதியின் செய்தி ஆசிரியராக இருந்தவர்.

பிற்காலத்தில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'உதயன்' நாளிதழுக்கும், கொழும்பிலிருந்து வெளியான 'சுடர்ஒளி' நாளிதழ் மற்றும் வார இதழுக்கும் நான் ஒரே சமயத்தில் ஆசிரியராக இருந்தபோது, சுடர்ஒளி பிரதம ஆசிரியராக இரத்தினசிங்கமும், உதயனின் பிரதம ஆசிரியராக கானமயிலநாதனும் இருந்தனர்.

நாங்கள் எல்லோருமே சிவநாயகம் ஐயாவின் ஊடக வாரிசுகளே. வயதில் மூத்தவரான இரத்தினசிங்கமும் மறைந்து விட்டார்.

சிவநாயகம் ஐயாவை உள்ளும் புறமும் அறிந்த சிஷ்யர், உற்ற தோழர், நெருக்கமானவர் 'கே.கே. ஆர்.' என்று அழைக்கப்பட்ட இரத்தினசிங்கம். மறைந்த சிவநாயகம் ஐயா குறித்துத் தாம் எதுவுமே எழுதவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு சிவநாயகம் ஐயாவின் ஓராண்டு நினைவு தினத்தின்போது - 29 ஏப்ரல் 2001 வெளியான - சுடர்ஒளி வார வெளியீட்டில் அவர் 'ஏன்?...ஏன்?...ஏன்?' என்ற தலைப்பில் எழுதிய முழுப் பக்க விவரணத்தை அப்படியே இங்கு தருகிறேன்.

இதில் இரண்டு விடயங்கள். சிவநாயகம் ஐயா பற்றிய பல விவரங்களை இக்கட்டுரை மேலோட்டமாகத் தொட்டுக் காட்டத் தவறவில்லை. அத்துடன் குறைந்த சொற்கள் கொண்ட வசனங்களில், எளிமையான தமிழில், பாமர வாசகர்களும் புரியக் கூடியதாக ஒரு விடயத்தை எழுதலாம் என்று சிவநாயகம் ஐயா அடிக்கடி குறிப்பிடுவார் என்பேனே, அந்த விவகாரம் இந்தக் கட்டுரையில் பிரதிபலிப்பதை நீங்கள் நன்கு பார்க்கலாம். இனிக் கட்டுரைக்குள் நுழைவோம் வாருங்கள். அது வருமாறு:-

கேள்விக் குளவிகள் என்னைத் துரத்தித் துரத்திக் கொட்டின. காட்டில் அல்ல, விவேகானந்தா மேட்டில்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கமலா மோடி மண்டபத்தில் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகத்தின் ஓராண்டு நினைவு தினப் பஜனையும் இரவு விருந்தும் நடைபெற்றன.

ஆசிரியர் சிவநாயகத்தின் துணைவியார் மங்களவதி, பிள்ளைகள் உதயநாயகம், சித்திரா, இந்திரஜித், செந்தில்குமரன் மற்றும் மருமகன் டாக்டர் அருள் இராமலிங்கம் ஆகியோர் பஜனையையும் விருந்தையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

வெகு உருக்கமான பஜனை உள்ளத்துக்கும், அருமையான விருந்து வயிற்றுக்கும் இதமாக இருந்தன. அப்போதுதான் இந்தக் குளவிக் கொட்டுதலும் நடந்தது.

ஆசிரியர் திரு.எஸ்.டி.சிவநாயகம் இலங்கையின் தலை சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர். எல்லாத் துறைகளிலும் தமது எழுத்தாற்றலை முழுமையாகக் காட்டியவர். தமிழ்ப் பத்திரிகைத்துறைக்குப் புதிய பரிமாணம் கொடுத்து அதை வளர்த்தவர்.

இவை மட்டுமல்ல. அவரைப் போல் வேறு எவரும் இந்த நாட்டில் பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் உருவாக்கித்தரவில்லை. இலங்கையில் உள்ள தமிழ்ப்பத்திரிகைகளில் மட்டுமல்லாமல் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளிலும், ரேடியோ, டி.வி. நிலையங்களிலும் ஆசிரியர் எஸ்.டி. சிவநாயகத்திடம் பயிற்சி பெற்றவர்களே பெரும் எண்ணிக்கையில் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அவரை இந்த நாடு நன்கு அறியும். தமிழகத் தமிழர்கள் அறிவார்கள். ஏன், தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும், கண்டங்கள் அனைத்தும் உள்ள தமிழர்களும் அறிவார்கள்.

அவரின் ஓராண்டு நினைவையொட்டியாவது அவரைப்பற்றி நீங்கள் சுடர் ஒளியில் ஏதாவது எழுதியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் அல்லவா? ஏன் எழுதவில்லை ? ஏன்... ஏன்? ஏன்...?

- இப்படிப் பலர் என்னிடம் கேட்டார்கள். நியாயமான கேள்விதான். இத்தனைக்கும் அவர்கள் என்னைச் சுடர் ஒளி மூலம் மட்டுமே அறிந்து கொண்டவர்கள். என்னுடன் நேரடிப் பரிச்சயம் இல்லாதவர்கள். என்னுடைய முன்புலத்தை அறியாதவர்கள்.

ஆசிரியர் சிவநாயகம் மீது அவர்கள் வைத்திருக்கும்அன்பையும்அபிமானத்தையும்பெருமதிப்பையும் கண்டுபுளகாங்கிதம் அடைந்தேன்.

சுடர் ஒளி இப்போது எடுத்து அடிவைக்கும் எட்டு மாதக் குழந்தை . அதன் மீது வாசகர்கள் எவ்வளவு பற்றும் பாசமும் வைத்து அதனை அணைத்து மகிழ்கிறார்கள்..!

ஆசிரியர் சிவநாயகம் ஏற்கனவே பெருமைக்கு உரியவர். சுடர் ஒளியில் அவரைப் பற்றி எழுதினால் சுடர் ஒளிக்கும் பெருமை சேருமே என்று கருதிக் கேள்வி கேட்கிறார்களே, அதை எண்ணி எண்ணிப் பூரிப்பு அடைந்தேன்.

இந்த நிலையில் என்னுடைய பாடசாலைக் காலத்தில் இருந்தும் பின்னர் பத்திரிகைத் தொழிலில் நான் காலடி எடுத்து வைத்த காலத்திலிருந்தும் என்னுடன் மிகவும் பரிச்சயமானவர்கள் என்னை அணுகினார்கள். அவர்களில் பலர் ஆசிரியர் சிவநாயகத்தையும் நன்கு அறிந்தவர்கள். அவருடைய ஆப்த நண்பர்களும் கூட.

என்னை ஒரு நன்றி கெட்டவன், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவன் என்ற தோரணையிலேயே அவர்கள் என்னை உரிமையோடு குடைந்தார்கள்.

ஆசிரியர் சிவநாயம் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவராக இருந்து அருஞ் சேவை ஆற்றியவர்.

அவரை அறிந்தவர்களும் அவரோடு அவ்வப் போது பணியாற்றியவர்களும் அவரைப் பற்றிப் பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிவிட்டார்கள்.

பிற்காலத்தில் பத்திரிகைப் பணியோடு அவர் ஆற்றிய அளப்பரிய சாயி பணி பற்றியும் பலரும் எழுதியிருக்கிறார்கள்.



பிற்காலத்தில் கே.கே.இரத்தினசிங்கம்

பத்திரிகைத்துறையில் ஆசிரியர் சிவநாயகம் விண்ணாதி விண்ணன், ஜாம்பவான், நடமாடும் பல்கலைக் கழகம், பேராசான் என்றெல்லாம் பலரும் தத்தமக்குத் தெரிந்த உண்மைகளை எழுதினார்கள்.

ஆசிரியர் சிவநாயகம் வெறுமனே பத்திரிகைத் துறையோடும் சமயத்துறையோடும் நின்று விடவில்லை. அவர் பல்வேறு துறைகளிலும் அகலக்கால் வைத்து வெற்றி கண்டவர். அவர் அரசாங்கச் சான்றிதழ் பெற்ற ஒருவைத்தியர், சிறந்த சோதிடர். இரத்தினக்கல் தொழில் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர். பல கைத்தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டவர். அவர் ஒரு புகைப்படக் கலை நிபுணர். நல்லதொரு கலைஞர்.

இந்த விவரங்கள் பலருக்குத் தெரியாதவை.

பத்திரிகைத்துறையில் கூட ஆசிரியர் சிவநாயகம், தினகரன், சுதந்திரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, சூடாமணி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியதைத்தான் பலரும் அறிந்திருக்கிறார்கள், அவர் நடத்திய சிந்தாமணிப் பத்திரிகையின் விற்பனை ஒரு லட்சத்தை எட்டியது. இலங்கையில் வேறெந்தத் தமிழ்ப் பத்திரிகையும் வாரந்தோறும் இவ்வளவு பிரதிகள் விற்பனையாகியது கிடையாது. இன்றைக்கும் சிந்தாமணியின் சாதனையை எந்தத் தமிழ்ப் பத்திரிகையாலும் முறியடிப்பது என்ன, எட்டக் கூட முடியவில்லை .

முன்கூறிய பத்திரிகைகள் தவிர வேறு சில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் ஆசிரியர் சிவநாயகம் ஆரம்பித்து நடத்தியிருக்கிறார். அதன் முழுவிவரம் எங்களுக்கே இப்போது சரிவரத் தெரியவில்லை .

இவற்றையெல்லாம் ஒன்று விடாமல் அறிந்து வைத்திருக்கும் ஒரே பத்திரிகையாளன் நீங்கள்தான். சுதந்திரன் முதல் அவர் கடைசியாக நடத்திய சூடாமணி வரை எல்லாப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் நீங்கள் அவருக்கு அடுத்தபடியில் இருந்து சுமார் 45 வருடங்கள் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறீர்கள்.

(09ஆம் பக்கம் பார்க்க)



கானமயிலநாதன் தம்பதியினரைக் கௌரவிக்கும் 'தினக்குரல்' ஸ்தாபகர் எஸ்.பி.சாமி.



நிகழ்வு ஒன்றில் சிவநாயகம் ஐயாவும் இரத்தினசிங்கமும்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 141



மசாசூட்ஸ் தீர்மானத்தை முன்மொழிந்த மேரி ஹாவ்


**374. இந்தியாவுக்கு எதிராக இப்படி எழுதப்பட்டதா? ஏன் எழுதப்பட்டது?**

எழுதப்பட்ட கடிதத்தைத் தந்திருந்தேன். அவை இடம்பெற்ற காலத்திலேயே அவற்றை அறிந்த பொழுது இவற்றின் தாக்கத்தைப் பற்றிப் பேசினேன். ஆனால் தகுந்த பதில்கள் வந்ததில்லை. பின்னால் அது பற்றித் தெரியாது என்றே சொல்லப்பட்டது. இந்தக் கேள்விகள் கேட்கப்படும்போது, எனக்கு அனுப்பப்பட்ட பகவத் கீதையின் குட்டிக் கதை பொருத்தமாகப்படுகிறது.

மாட்டு வண்டிக்கு உயிர் இல்லை, மாட்டுக்கு உயிர், அறிவு இரண்டும் உண்டு. ஆனால் வண்டிக்காரன் உயிரில்லாத வண்டியை, அறிவுள்ள மாட்டுடன் பூட்டி, எங்கு செல்லவேண்டும் எனத் தீர்மானித்து ஓட்டுவான். எவ்வளவு தூரம், எவ்வளவு பாரம், எவ்வளவு நேரம் என்ற எல்லாவற்றையும் தீர்மானிப்பவன் வண்டிக்காரன் மட்டுமே. அறிவிருந்தும், சுமப்பது தானாக இருந்தாலும் மாட்டால் ஒன்றும் செய்ய இயலாது. எப்படி ஆண்டவன் தீர்மானித்து இயக்க மனிதன் எவ்வளவு காலம், நேரம், பாரம் என்று சுமந்து இயங்குகிறானோ, அப்படி விடுதலைப் புலிகள் போட்ட சித்திரத்தில், டிசைனில், அறிவிருந்தும் மாடுகள் போல தமிழ் மக்கள் பாரத்தைச் சுமந்தார்கள். அவர்களின் பயணம் அப்படியே தொடர்கிறது. உயிர் என்ற மாட்டை இறைவன் பிரித்து விடும் வரை துயரம் இல்லை. உணராதவனுக்கு விடிவும் இல்லை - அமைதி காண. ஆகவே இருக்கும் இந்தக் காலங்களிலாவது எவை சரியோ அவற்றைத் தமிழ் மக்கள் செய்யவேண்டும்.

**375. வைகுந்தவாசன், ஐ.நாவில் செய்த அத்துமீறிய பிரவேசமும் பேச்சும் ஸ்ரீலங்காவில் எவ்வாறு எதிர்வலைகளை ஏற்படுத்தின?**

அரசாங்கத் தரப்பிலும் சிங்களவர் மத்தியிலும் அதிருப்தி அல்ல, கோபமும், ஆவேசங்களுமே எழுந்தன. அந்தக் கோபங்களும் ஆவேசங்களும் அமிர்தலிங்கத்துக்கு எதிராகவே திருப்பப்பட்டன. அமிர்தலிங்கமும் தான் வெளியிட்ட அறிக்கைகளில் "வைகுந்தவாசன் இரத்தினச் சுருக்கமாக தமிழீழத் தேசத்தின், சுயநிர்ணய உரிமையையும், அவர்களின் புதிய காலனித்துவவாதிகளான ஸ்ரீலங்காவிடமிருந்து தமிழீழ தேசம் விடுதலை பெறவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார். இன்று தமிழ் மக்களின் முக்கிய தேவை சர்வதேச நாடுகளிடையே தமிழர்களது கோரிக்கையை தெரியப்படுத்துவதுதான். ஸ்ரீலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் பேசுமுன்பே, மேடையில் தோன்றி, ஐ.நாவின் பொதுச்சபையில் பேசிய வைகுந்தவாசன் இன்று தமிழீழத்தை உலகின் வரைபடத்திலே பதிந்துள்ளார்" எனக் குறிப்பிட்டார். அரசாங்கத் தரப்பு மட்டுமல்ல எதிர்க்கட்சியினர் கூட நாடாளுமன்றத்தில் இந்தச் சம்பவத்தையும் அமிர்தலிங்கத்தின் அறிக்கையையும் எடுத்து, தமிழர்கள் சிங்கள மக்களை, அடக்குமுறையாளர்கள் என உலகத்திற்கு விசமப் பிரச்சாரம் செய்கிறார்கள், அவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என சத்தமிட்டமை மட்டுமல்லாமல் வைதார்கள் இந்தப் பின்புலத்தில் இன்னுமொன்றும் நடந்தேறியது.



ஜே.ஆர்.ஜெயவர்தனா



மசாசூட்ஸ் ஆளுநர் எட்வேர்ட் ஜே. கிங்

**376. அது என்ன?**

10 மே 1979இல் தற்பொழுது மசாசூட்ஸ் தீர்மானம் (Massachusetts) என அறியப்படும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. மசாசூட்ஸ் அமெரிக்காவின் ஒரு மாநில அரசு. அதனது சட்டசபையில் அதன் சோமவில் (Somerville) பகுதியின் அங்கத்தினர் மேரி ஹாவ் (Marie E Howe) ஒரு பிரேரணையை முன்னெடுத்தார்.

அதன் முன்னுரையில் –

"3 கோடி தமிழ்மக்கள் 2,000 சதுரமைல் பரப்பில் ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்கிறர்கள். அவர்கள் பண்டைய காலம் முதல் அந்த நாட்டில் சிங்களம், தமிழ் என்ற இரண்டு தேசங்களாக தத்தமக்கே உரிய மொழி, மதங்கள், கலாசாரங்களோடு மிகத் தெளிவாக அடையாளப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். அந்த இரண்டு தேசங்களையும், தங்களது காலனித்துவ நன்மைகளுக்காக பிரித்தானியா ஒன்றாக இணைத்து நிர்வாகித்து வந்தது. அன்றிலிருந்து சுதந்திரத்தின் பின் நடந்த பாகுபாடுகளையும் அடக்குமுறைகளையும் குறிப்பிட்டு, தமிழ்மக்கள் 1972, 1978 குடியரசு சட்டங்களில் பங்குதாரர்களாகவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, பின்வரும் தீர்மானத்தை அந்தச் சபை நிறைவேற்றியது.



எம்.சிவசிதம்பரம்

மசாசூட்ஸ் சட்டசபை இந்தத் தீர்மானத்தால் அமெரிக்க ஜனாதிபதியையும், அமெரிக்க காங்கிரஸையும் தங்களுக்கு இருக்கும் கணிசமான செல்வாக்கைப் பாவித்து கடுமையான அநீதிகளுக்கும் மனிதாபிமானத்திற்கு எதிராகவும், ஸ்ரீலங்காவின் தமிழ் மக்கள் நடத்தப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும்" – என்று தீர்மானம் கூறியது.

அதனை நிறைவேற்றிய சட்டசபை அந்தத் தீர்மானத்தை அமெரிக்க ஜனாதிபதிக்கும், அதன் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் மேலும் கொமன்வெல்த் (பொது நலவாய) தேசங்கள் அமைப்பின் காரியதரிசி, ஐ.நா. சபையின் காரியதரிசி ஆகியோர்களுக்கும் அனுப்பி வைத்தது.

அது மட்டுமல்ல, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் பின் அந்த மாநிலத்தின், கவர்னர் எட்வார்ட் கிங் (Edward King) 22 மே 1979 தினத்தைத் தமிழீழ நாளாகப் பிரகடனம் செய்து, தமிழர் விடுதலைக் கூட்டணியில் நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசிதம்பரத்தை அந்த மாநிலத்தின் நிகழ்வுகளில் பங்குபற்ற அழைத்து, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதியை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.



அமிர்தலிங்கம்

இவையெல்லாம் சிங்கள மக்களின் வெறியைத் தூண்டின. ஜே.ஆர், தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தடைசெய்து, தனிநாடு கேட்பதை சட்டவிரோதமாக்கும் நடவடிக்கைகளுக்கு தனது நாடாளுமன்ற அங்கத்தினர்களான துவேஷம் நிறைந்த பிரேமசந்திராவையும் சுனில் ரஞ்சன் ஜயக்கொடியையும் தூண்டிவிட்டார்.

(வளரும்)....

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** அநுராதபுரம் சிறைச்சாலைப் பிரச்சினை பற்றி ஆராய ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் விசாரணைக்குழு அமைத்திருக்கிறார்களாமே?

**பதில் :-** “கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேடும் வேலை. காலத்தை இழுத்தடிக்க செய்திருக்கும் உத்தி. ஓய்வு பெற்ற நீதிபதிக்குக் கிடைத்திருக்கும்மறு வாழ்வு என்பதைத்தவிர வேறு எந்தப் பயனும் இதனால் இருக்கப் போவதில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ மக்களை மடையராக்கலாம். வாத்து மடையராக்கக் கூடாது பாருங்கோ. ஹி.... ஹி....ஹி....**

**2. கேள்வி:-** உங்களது கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனை இவ்வளவு வெளிப்படையாய் விமர்சித்திருக்கிறீர்களே? அது அவரது மனதைப் பாதிக்காதா? அவரின் எதிர்வினை



எதுவாக இருந்தது?

**பதில் :-** பாதிக்காமல் எப்படி இருக்கும்? பாதிக்க வேண்டும் என்பதற்காகத் தானே எழுதினேன். அந்த எழுத்துக்குள் இருக்கும் என் அன்பை அவன் புரிந்து கொள்வான் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. என் எண்ணத்தை அவன் உடனேயே நிரூபித்தும் விட்டான். தனது முகநூலில் அந்தக் கேள்வி பதிலை அப்படியே பதிவிட்டு அதற்கு “என்னைச் செதுக்கும் சிற்பி” என தலைப்பும் இட்டிருக்கிறான். அதுதான் கம்பன் கழகம். எமது கழகம் ஓர் அமைப்பல்ல, ஒரு குடும்பம் என்று அடிக்கடி நான் சொல்வேன். அதனை அவன் நிரூபித்துக் காட்டியிருக்கிறான்.

விமர்சனம், விமர்சனம் என்று கொண்டாடித் திரியும் பல்கலைக்கழகத்தார், தங்கள் மீதான விமர்சனங்களை என்றும் விரும்புவதில்லை. அவர்களுக்கும் பிரசாந்தன் வழிகாட்டியிருக்கிறான். எழுத்தில் என் எண்ணத்தை ஏற்றுக்கொண்டதைப் போலவே செயலிலும் அவன் செய்து காட்டினால் மிக, மிக மகிழ்வேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ “நாரதர் கலகம் நல்லபடி முடிந்திருக்கிறது.” ஹி.... ஹி....ஹி....**

**3. கேள்வி:-** ஜனாதிபதி ஐ. நா. சபைக் கூட்டத்திற்காக அமெரிக்கா சென்றிருக்கிறாரே?

**பதில் :-** சென்றிருக்கிறாரா? வரவைக்கப்பட்டிருக்கிறாரா? - என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். “சீன ட்ரகனால் கௌவப்பட்ட இலங்கைக் கோழிக்குஞ்சை அமெரிக்கக் கழுகு பற்றி இழுத்து பறந்து செல்வதாய் அடிக்கடி ஓர் கற்பனை வருகிறது. விரைவில் உண்மையை காலம் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ “அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகருமுங்ங்ங்கோவ்!”**

**4. கேள்வி: -** தமிழரசுக் கட்சியிலும் சரி, கூட்டமைப்பிற்குள்ளும் சரி, சுமந்திரனை ஏன் எல்லோரும் எதிர்க்கிறார்கள்? அவரை வெளியே போட ஏன் துடிக்கிறார்கள்?

**பதில் :-** அதுதான் எனக்கும் புரியவில்லை! எல்லோரும் எதிர்க்கிறார்கள் என்பது சரியா? - தெரியவில்லை! பெரும்பான்மையினோர் எதிர்க்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். சுமந்திரனின் நாடாளுமன்ற உரைகள், அவர் ஊடகங்களுக்கு வழங்கும் பேட்டிகள், உள்நாட்டு, வெளிநாட்டுத் தலைவர்களுடன் அவரின் தொடர்பாடல்கள், நமது இனம் சார்ந்த சட்டப் பிரச்சினைகளில் அவரது ஆழமான பங்களிப்பு என அனைத்தையும் பார்த்து வருகிறேன். நிதானமான, ஆணித்தரமான, யதார்த்தம் அறிந்த, சட்டநுணுக்கம் பொருந்திய அவரது செயற்பாடுகளுக்கு மாற்றீடாய் நம் தலைவர்களுள் ஒருவர்தானும் இருக்கிறாரா என்று நடுவுநிலைமையாய்ச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சொன்ன எந்தக் கட்சியிலும் அத்தகைய பன்முக ஆற்றல் கொண்ட ஒருவர் கூட இருப்பதாய்த் தெரியவில்லை. அப்படி எவரேனும் இருக்கிறார் என்றால், கட்சியை விட்டு தூக்கி எறிவதென்ன? வேண்டுமானால் கடலுக்குள் கூட தூக்கி எறிந்துவிடலாம்.

நான் நம் தலைவர்கள் எல்லோருடைய உரைகள், பேட்டிகள், அறிக்கைகள் என அனைத்தையும் கவனித்து வருகிறேன். ஒருவர் கூட சுமந்திரனுக்கு அருகில் நிற்கும் அருகதை அற்றவர்களாய்த்தான் தெரிகிறார்கள். கட்சிக்கு, இனத்திற்கு என்றுகூட இல்லை. அவரை எதிர்ப்பவர்களுக்கு கூட அவரின் தேவை இருப்பதை ஏனோ அவர்கள் மறந்து



விடுகிறார்கள். இந்த ஒரு விடயத்தில் மட்டும்தான் நான் தலைவர் சம்பந்தரை மனதாரப் பாராட்டுகிறேன். இருப்பவர்களுள் தக்கவர் யார் என்பதை அவர் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார். அவர் தரும் உறுதியால்த்தான் சுமந்திரனால் இன்றுவரை நின்றுபிடிக்க முடிகிறது.

பத்திலிருக்கும் ஒன்றை நீக்கிவிட்டால் பூச்சியம் மிஞ்சுமாற்போலத்தான் சுமந்திரனை அகற்றிவிட்டால் நம் தலைமைகளின் நிலை இருக்கப்போகிறது. இன்றைய நிலையில் சுமந்திரன் இல்லாத ஈழத்தமிழரின் அரசியலை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அச்சை முறிக்க ஆசைப்படும் இவர்களின் அறிவீனத்தை என்ன சொல்ல! சுமந்திரனை இவர்கள் எதிர்க்க, பொறாமையைத் தவிர வேறு காரணங்கள் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

கூட்டமைப்புக்குள் இருக்கும் இளையோரும், சமூகஅக்கறையுள்ள இளைஞர்களும் சுமந்திரனின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். தவறினால் நம் இனத்தார் அரசியல் அநாதைகள் ஆகப் போவது திண்ணம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ “யாரங்கே? வாரிதியார் வீட்டிற்கு இரெண்டு சூட் கேஸ்கள். உடனே போகட்டும்” ச்சும்மா, ச்சும்மா ஹி...ஹி... ஹி....**

**5. கேள்வி: -** பல்கலைக்கழகத்தைக் கண்டிக்கும் நீங்கள் இதை எல்லாம் பார்க்கமாட்டீர்களா என்று உங்கள் மாணவர் ஒருவர் எழுதிய வெண்பாவை குற்றம் சொல்லி முகநூலில் ஒருவர் பதிவிட்டிருக்கிறார். அவருக்கான உங்கள் பதில்தான் என்ன?

**பதில் :-** நானும் பார்த்தேன். தமிழ் மீதான அந்த நண்பரின் அக்கறையை பாராட்டுகின்றேன். அதே நேரத்தில் இந்த வெண்பா விடயத்தில் சிலவற்றை நான் பகிர்ந்து கொள்ள வேண்டியும் இருக்கிறது. தெரியாமல் ஒரு கேள்வியைக் கேட்டு என்னை உசுப்பேற்றி விட்டீர்கள். கவிஞர்கள் தவிர்ந்த மற்றையவர்களுக்கு “மகா ”போர் அடிக்கத்தக்க நீண்ட பதில் ஒன்றை எழுதப் போகிறேன். இந்தப்பதிலை மற்றவர்கள் சகித்துக் கொள்வார்களாக!

முதலில் அப்பாடலை வெண்பா என, எழுதியவர் எங்கேனும் குறிப்பிட்டிருக்கிறாரா? என்பதை பார்க்க வேண்டும். அவர் வெண்பா ஓசை வரத்தக்கதாக ஒரு கவிதை எழுதியிருக்கிறார். அவ்வளவுதான். அதே போல, வெண்பா ஓசை மட்டும் வரத்தக்கதாக நானும் பல கவிதைகள் எழுதியிருக்கிறேன். இந்த வேலை உங்களுக்கு எதற்கு? என்று கேட்பீர்கள். - சொல்கிறேன்!

நம் தமிழ்க்கவிதை இலக்கணங்களுள் வெண்பா இலக்கணம், மிக நுட்பமானது. அதனாற்றான் வெண்பாவை இலகுவாய் ஆட்சி செய்த ஔவையான ஔவையே, “புலவர்க்கு வெண்பா புலி” என்று பாடியிருக்கிறார். எனது ஆசிரியர் மறைந்த பேரறிஞர் இலக்கணவித்தகர் நமசிவாயதேசிகர் அவர்கள், ஔவை பாடல்களிலேயே தளை பிழைத்த ஒரு வெண்பா இருப்பதாகவும் அறிவுலகத்தார் ஔவையின் ஆற்றல் அறிந்ததால் அதனையும் “சவலை வெண்பா” எனக் குறிப்பிட்டு அங்கீகரித்துள்ளதாகவும் சொல்லியிருக்கிறார்.

இனி விடயத்திற்கு வருகிறேன். என்னைப் பொறுத்தவரை கவிதையின் இலக்கணம் காதால் கேட்டு உணரப்பட வேண்டும். ஒரு கவிதையின் அடிகளுக்குள் இருக்கும் ஓசை ஒத்திசைவு, எதுகை, மோனை போன்றவை பிழைத்தால் அக்கவிதையை கேட்டவுடன் அப் பிழை உடன் நம் காதுக்குத் தெரிய வேண்டும். சங்கீதத்தில் சுருதி பிழைத்தால் ஒரு வித்வானுக்கு எப்படி அது உடன் தெரிய வருமோ, அப்படி ஒரு கவிதையின் இலக்கணம் பிழைத்தால் ஒரு கவிஞன் அதனை காதால் கேட்டவுடன் உணர வேண்டும்.

ஓரளவு கவிதை அனுபவம் உடையவர்களுக்கு மற்றைய கவிதை வடிவங்களுள் மேற்சொன்னவாறு காதால் கேட்டு பிழை உணர்தல் சாத்தியப்படும். ஆனால் வெண்பா அதிநுட்பமானது. அதன் இலக்கணங்களுள் அசை, சீர், தளை என எல்லாவற்றுக்கும் கடுமையான நிபந்தனைகள் உண்டு.

வெண்பாவின் நான்கு அடிகளுள், முதல் மூன்று அடிகள் நான்கு சீர்களைக் கொண்டவையாகவும் கடைசி அடி மூன்று சீர்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பதும், ஈற்றுச் சீர் - நாள், மலர், காசு, பிறப்பு எனும் வடிவங்களுள் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதும், முதல் இரண்டு அடிகளில் வரும் எதுகை, கோட்டுச் சொல்லிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும், முதல் இரண்டு அடிகளிலும் வரும் எதுகை பின் இரண்டு அடிகளிலும் மாறலாம் என்பதும், வெண்பாவுக்கான பொதுவான இலக்கணங்கள். இவை பிழைத்தால் ஓரளவு கவிதை அனுபவம் கொண்ட ஒருவர் அதனைக் காதால் கேட்டே இனங்கண்டு கொள்ள முடியும்.

இனித்தான் பிரச்சினை ஆரம்பமாகிறது! வெண்பாவின் அசைகளுக்கு இடையிலான தொடர்பு பற்றி இறுக்கமான வரையறை உள்ளது. இதனையே “தளை” என்கிறார்கள். வெண்பாவின் தளைகள் வெண்தளைகளாக அமைய வேண்டும் என்பது சட்டம். தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய், தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்பனவாய் அசைகளைப் பிரித்து இன்னதன் முடிவில் இன்னது வர வேண்டும் என இலக்கணப்படுத்தியிருக்கிறார்கள். (இவற்றை எந்தச் சந்தையில் வாங்கலாம் என்று தயவு செய்து கேட்டுவிடாதீர்கள்) இந்த அசைகளுக்கிடையிலான தளைத் தொடர்பை காதால் கேட்டு உணரும் திறம் உள்ளோரே வெண்பா எழுதுகிற தகுதி உடையவர்கள் ஆவர். இன்று வெண்பா எழுதுவோரில் பெரும்பாலோர்க்கு இத்தகுதி இல்லை.

இலக்கணம் படித்து வெண்பா எழுதுகிற பல பேரும் “கார் கராஜில இருக்கும் மெக்கானிக்.” ஒரு ஆணியில் ஒரு நட்டைப் பூட்டிப் பார்த்துவிட்டு இது பொருந்தவில்லை அடுத்த நட்டைக் கொண்டுவா என்பதுவாய் எழுத்துக்களை மாற்றி, மாற்றிப் போட்டு ஒரு மாதிரியாக வெண்பா இலக்கணத்தை, திருப்திப்படுத்த முயல்கிறார்கள். அங்ஙனம் செய்கையில் இலக்கணம் நிறைவாகுமே தவிர கவிதை நிறைவாகாது.

அப்படியானால் அந்த இலக்கணத்தை நீங்கள் நிராகரிக்கிறீர்களா? என்று கேட்பீர்கள். ஒரு நாளும் இல்லை! அதை நிராகரிக்க நான் ஆர்? எதுகை, மோனை வரிகளுக்கிடையிலான ஒத்திசைவு என்பவற்றை காதால் கேட்டுத்தெரிந்து கொள்வதைப் போல, இந்த வெண்பாவில் தளை பிழைக்கிறது என்பதையும் காதால் கேட்டே சொல்லக் கூடியவருக்குத்தான் வெண்பா எழுதும் உரிமை உண்டு என்பதே எனது அபிப்பிராயம். அங்ஙனம் இல்லாமல் எழுத்துக் கூட்டி “றிப்பயர்” பார்த்து எழுதும் “கத்துக்குட்டிகள்” எழுதும் வெண்பாக்களை நான் வெண்பாக் கவிதைகளாக ஒத்துக்கொள்ள மாட்டேன். நம் பழைய இலக்கணக்காரர்களும் “காரிகை கற்று கவி பாடுவதிலும் பேரிகை கொட்டி பிழைத்தல் நன்றே” என உரைத்திருக்கிறார்கள். அவர்கள் என்னை விடப் பெரிய கிண்டல்காரர்களாய் இருப்பார்கள் போல!

(10ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

இந்தவாரம் இவர்



# ஸ்டாலின் ஏன் மக்களால் கொண்டாடப்படுகின்றார்?

நவீன ரஷ்யாவின் தந்தை என்றழைக்கப்படும் ஸ்டாலினுக்கு கோரமான முகம் ஒன்றும் இருக்கிறது. ஹிட்லர் அளவுக்கு மக்களைக் கொடுமைப்படுத்திய ஸ்டாலின் ஏன் மக்களால் கொண்டாடப்படுகிறார்? இதனை நாங்கள் அறிய வேண்டுமானால் நூறு ஆண்டுகள் பின்னோக்கிப் பயணிக்க வேண்டும் ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரியாக இருந்தாலும் ஏன் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் ?

ஸ்டாலினின் தந்தை மோசமான குடிகாரராக இருந்தார் – ஸ்டாலினை அக்கறையாக வளர்த்து எடுத்தவர் சலவைத்தொழில் செய்யும் அவரின் தாய் கேகே தான். வறுமை என்னும் அரக்கனின் கைகளில் இவர்களின் குடும்பம் சிக்கிக்கொண்டது. மகனை தொழிற்சாலையில் வேலைக்கு அனுப்ப தந்தை முடிவெடுத்தார். அதற்கு குறுக்கே நின்றார் ஸ்டாலினின் தாய். இருவருக்கும் இடையேயான வாக்குவாதம் குடும்ப சண்டையாக மாறியது. இறுதியில் இருவரும் பிரிந்தனர். ஸ்டாலின் தாயோடு வாழத் தொடங்கினார். வறுமை அவர்கள் இருவரையும் வாட்டி எடுத்தது .

சலவைத் தொழிலில் அவர்களின் வாழ்வாதாரத்தை பூர்த்திசெய்யும் வருமானம் கிடைக்கவில்லை. கேகேவிற்கோ தன் மகன் ஸ்டாலினை பாதிரியாராக்க வேண்டும் என்ற ஆசை. தங்களுடைய ஜார்ஜியா நாட்டின் தலைநகரான டிப்ளிசில் திருச்சபை பள்ளி ஒன்றில் சேர்க்கப்பட்டார் ஸ்டாலின். மகனுடைய வருங்காலம் குறித்து மிகுந்த பக்தியோடு கடவுளிடம் வேண்டிக்கொண்டாள் தாய் கேகே .

ஹிருச்சபையில் படிக்கப்போன ஸ்டாலினுக்கு படிப்பில் கவனம் இல்லை மாறாக போராளிகள் மீது கவனம் திரும்பியது இதற்கு மிகமுக்கிய காரணமாக இருந்தவர் கம்யூனிஸ்டுகளின் கடவுளாக இருந்த கார்ல் மார்க்ஸ். அவருடைய புரட்சி கோட்பாடுகள் ஸ்டாலினை பெருமளவு ஈர்த்தன. ஜார் மன்னரின் கொடுமைகளையும், தொழிலாளி வர்க்கத்தின் பாடுகளையும் நேரில் கண்டார். தன்னை கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார். இந்தச் செய்தி பாதிரியார்களின் காதுகளை எட்டியவுடனே பள்ளியிலிருந்து ஸ்டாலின் விடுவிக்கப்பட்டார். தன்னுடைய வாழ்நாள் இலட்சியம் நாசமாய் போனதாக அவரின் தாய் கேகே மிகவும் அழுதார்.

புரட்சிதான் வாழ்க்கை என்றாகிவிட்ட ஸ்டாலினுக்கு நேரடி அரசியலின் மீதான ஆர்வம் தொற்றிக் கொண்டது. தன்னுடைய முதல் அரசியல் பேச்சை 1900 ஆம் ஆண்டு ஜாருக்கு எதிராக தொடங்கினார். அந்தக்குரலில் புரட்சி இருந்தது. அடிமைத்தனத்தைப் பற்றிப் பேசினார். சுதந்திரத்தைப் பேசினார். கூட்டம் மெய்மறந்து கேட்டது. ஸ்டாலினின் முதல் வெற்றி அது தான். அடுத்தடுத்து தொடர்ந்த கூட்டங்களில் புரட்சி கருத்துக்கள் சீறிப் பாய்ந்தன மக்கள் ஆர்ப்பரித்தனர் கம்யூனிஸ இயக்கத்தில் பெருந்தலைகளிடம் ஸ்டாலின் எனும் பெயர் பரீட்சயமானது.

இப்படி ஸ்டாலின் அரசியலின் ஆரம்ப அடிகளை எடுத்துவைத்த போது ஜார் மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் விளித்துக்கொண்டார். ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். சைபீரியாவில் இருக்கும் சிறைச்சாலையில் ஒரு வருடம் அடைக்கப்பட்டார் ஸ்டாலின். பின்னாளில் அந்த சிறைச்சாலைகளை ஸ்டாலின் பயன்படுத்திய விதம் கண்டு உலகமே பயத்தில் உறைந்துபோனது.

1917 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு ஆட்சி போல்ஷ்விக் கட்சியிடம் வந்தது. லெனின் சோவியத் யூனியனின் அதிபராக பதவியேற்றார். கட்சியில் ஸ்டாலின் அளவிற்கு புகழ்பெற்றவர் லியோன் ட்ராட்ஸ்கி. ஸ்டாலினுக்கு கடும்போட்டியாக இருந்தார். லெனினுக்கு பிறகு ஆட்சி செய்யப்போவது யார் என்ற கேள்வி பிரதானமாக எழுந்தது 1920 இன் தொடக்கத்தில். ஒரே கட்சியாக இருந்தாலும் ட்ராட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் கொள்கை அளவில் பெருமளவு வித்தியாசங்கள் இருந்தன.


இதற்கிடையில் லெனினின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமானது. மரணத்துடன் அவர் செய்த போரில் கடைசியில் வென்றது மரணம் தான். ஆண்டு 1924 லெனினின் மரணம் உலகத்தை உலுக்கிய நிகழ்வுகளில் ஒன்று. ஒன்றுபட்ட சோவியத் ரஷ்யாவின் எதிர்காலத்தை கணிக்கும் சக்தியாக இருந்தவர் லெனின். கம்யூனிஸ சிந்தனை உலகமெங்கிலும் நம்பிக்கையுடன் துளிர்த்த நேரம் அது. தத்துவார்த்த அடிப்படையிலேயே இருந்த கம்யூனிஸத்தை கள அரசியலுக்கு எடுத்துவந்தவர் லெனின். அவருக்குப்பின்னால் யார் இதனைச் செய்ய முடியும் என்ற கேள்வி பிரதானமாக எழுந்தது. தனக்குப்போட்டியாக இருந்த ட்ராட்ஸ்கியை ஓரங்கட்டிவிட்டு ஆட்சியதிகாரத்தில் உட்கார்ந்தார் ஸ்டாலின்.

வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு கொண்ட தேசமாக ரஷ்யாவை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்தார் ட்ராட்ஸ்கி. ஆனால் தொழில்துறை முன்னேற்றத்தை ஆதரித்தார் ஸ்டாலின். இதன் விளைவுகள் தெரியாமல் களத்தில் ஸ்டாலின் இறங்கினார். வெளிநாடுகளில் இருந்து இயந்திரங்கள் பெருமளவு வாங்கிக்குவிக்கப்பட்டன. விவசாயத்திற்கு ஒதுக்கிய நிதியிலிருந்து தொழிலக முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

உணவு உற்பத்தி நின்றுபோனது. ஆனால் தொழிற்சாலைகளுக்கான இயந்திரங்கள், மூலப்பொருள்கள் இறக்குமதி நடந்தது. இந்த அறிவாளித்தனமான காரியத்தின் பின்விளைவுகள் தெரிந்தவுடன் விவசாய உற்பத்திக்கு இந்த அரசு உறுதுணை செய்யும் என அறிக்கை வந்தது.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்த உக்ரேனை விடுவிக்க பல கிளர்ச்சிக் குழுக்கள் முளைத்திருந்த நேரம். உக்ரேனிய தேசிய வாதத்தை ஆதரித்த அத்தனை பேருடைய பட்டியலும் தயாரிக்கப்பட்டு ஸ்டாலினுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் துரோகிகள் என பெயர் சூட்டினார்.

இதன்மூலம் உக்ரேனுக்கு வெளியிலிருந்து செல்லும் அனைத்து உணவுப்பொருள்களும் ரஷ்யாவிற்கு திருப்பப்பட்டன. இதனைச் செய்தது ஸ்டாலினின் ராணுவம். செயற்கையாக தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டிற்காக ஸ்டாலின் எடுத்த இந்த நடவடிக்கையால் லட்சக்கணக்கானோர் இறந்து போனார்கள். ஸ்டாலினின் எதேச்சதிகார நடவடிக்கைகளின் தொடக்கம் இதுதான். எதிரிகளை விட துரோகிகளே அதிகம் தண்டனை பெறவேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தவர் ஸ்டாலின்.



அரசாங்க அதிகாரிகளிடமும் ஸ்டாலின் மீதான அதிருப்தி இருந்தது. தனக்கு எதிராக இருந்த தலைவர்களை ஸ்டாலின் அழிக்கத் தொடங்கினார் . மாநாட்டிற்கு வந்த அனைவரின் பெயரும் பட்டியலில் சேர்க்கப்பட்டது. கூடவே அவர்களுடைய அரசியல் நிலைப்பாடுகளும். தன்னுடைய எண்ணங்களுடன் ஒத்துப்போகாதவர்கள் அனைவரையும் கைது செய்யும்படி உத்தரவிட்டார். 1939 ஆம் ஆண்டிற்குள் அத்தனை பேரும் இறந்திருந்தனர்.

வரலாற்றில் யாராலும் எளிதாக மறக்க முடியாத நிகழ்வான ரஷ்யா – ஜேர்மனி யுத்தம் தொடங்கியது. இதனை முன்கூட்டியே கணித்திருந்தார் ஸ்டாலின். இதனால் ராஜதந்திர நடவடிக்கையாக எல்லையில் இராணுவம் குவிக்கப்பட்டது. ஹிட்லரின் படை எல்லையை நெருங்கும் முன்பே ரஷ்ய இராணுவம் பின்வாங்கியது. ரஷ்ய இராணுவம் பின்வாங்கும் போது வழியில் இருந்த அத்தனை விளைநிலங்களையும் தீயிட்டனர். குடிநீர் தொட்டிகளில் வித்தைக் கலந்தனர். ஜேர்மானியர்களுக்கு உணவோ, நீரோ கிடைக்கக் கூடாது என்பதே திட்டம். அதற்காக ஸ்டாலின் அழிக்க உத்தரவிட்டவை ரஷ்யக் கிராமங்கள். பாதிக்கப்பட்டவர்கள் ரஷ்யர்கள். அதுவும் அடுத்த வேளை உணவில்லாதவர்கள்.

ரஷ்யாவின் மீதான ஹிட்லரின் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இதற்கு அதிக விலை கொடுத்தது ரஷ்யா தான். அதுவும் அப்பாவி மக்களின் உயிர்களை பலியிட்டு யுத்தத்தை வென்றார்கள் ரஷ்யர்கள்.

ரஷ்யாவின் சிறைச்சாலைகளில் வருடந்தோறும் இறந்தவர்களின் எண்ணிக்கை அந்நாட்டின் மொத்த சனத் தொகையில் 10 சதவிகிதமாக இருந்தது. 1953 ஆம் ஆண்டு ஸ்டாலின் இறக்கும் வரையிலும் இதே நிலைமைதான் தொடர்ந்தது . ஸ்டாலினால் அவரது காவல்துறையால், இராணுவத்தால் கொல்லப்பட்ட ரஷ்யர்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 10 லட்சம் – இன்றும் ரஷ்ய மக்களில் 70 சதவிகிதத்தினர் ஸ்டாலினைப் பற்றி நேர்மறையான விம்பங்களையே வெளிப்படுத்துகின்றனர்.



# நாட்டுக்குள் தேசிய பாதுகாப்பு நல்ல நிலையில் இருக்கின்றது



## டிலான் எம்.பி. கூறுகின்றார்

நாட்டுக்குள் தேசிய பாதுகாப்பு நல்ல நிலைமையில் தற்போது உள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவரை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மாற்றுவதற்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் முயன்று வருகின்றனர் என டிலான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் கத்தோலிக்க திருச்சபைகளுக்கும் இடையே பதற்றத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

ஆனாலும், உண்மையில் தேவைப்படுவது 10 - 15 வருட காலத்துக்கான தேசிய நிகழ்ச்சி நிரலாகும் என அவர் கூறியுள்ளார்.

# இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளுக்கு விதித்த தடையைத் தளர்த்தியது மலேசியா

இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை மலேசியா தளர்த்தியுள்ளது.

இதன்படி, நிரந்தர வதிவிட அந்தஸ்து, நீண்ட கால வதிவிட அந்தஸ்து அடிப்படையில், வணிகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இந்த ஐந்து நாடுகளில் இருந்து மலேசியாவுக்குள் நுழையலாம் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு கடந்த ஏப்ரல் 26 முதல் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என மலேசியாவின் குடிவரவு பணிப்பாளர் ஜெனரல் கைருல் டைமி தாவுத் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தப் பயணிகள் முழுமையாக தடுப்பூசியை பெற்றவர்களாக இருக்க வேண்டும், நாட்டுக்கு வருகை தந்தவுடன் கொரோனாச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் மற்றும் சுகாதார அமைச்சால் அனைத்து வெளிநாட்டுப் பயணிகளும் குறிப்பிட்ட காலத்திற்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என 5 நாடுகளின் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான தடை, மலேசியாவில் இன்னும் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுப்போக்குவரத்து சேவை; வழிகாட்டல் கோவை வெளியீடு

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படும் என கூறப்படுகின்றது.

இந்நிலையில் அதற்கான வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்டுள்ளதாக அனைத்து மாகாண போக்குவரத்து அதிகார சபைகளின் தலைவர்களது சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதியை வழங்குவதற்கு அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் இணைப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க கூறியுள்ளார்.

# சம்பிக்க ரணவக்க எம்.பியிடம் 3 மணிநேர வாக்குமூலம் பதிவு

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை முன்னிலையாகிய, நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

அவரிடம் 3 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.



கடந்த ஆட்சியில் அமைச்சராக பணியாற்றிய காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி குறித்தே, அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ் ஊடகத்துறையின் ...........

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைத் துறையில் இப்படி இருவர் இணைபிரியாது இவ்வளவு நீண்ட காலம் பணியாற்றிய முதல் ஆள்கள் நீங்கள் இருவருமாகத்தான் இருப்பீர்கள் என்று நினைக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் நீங்கள் ஆசிரியர் சிவநாயகத்தின் கீழ் பணியாற்றினாலும் அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில், ஒரே குடும்ப உறுப்பினர்களாகவும், உடன் பிறவாச் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் தோழர்களாகவும் பழகியிருக்கிறீர்கள்.

அந்த வகையில் பத்திரிகை விடயங்களையும் மற்றும் பொதுவான விடயங்களையும் நீங்கள் இந்த 45 வருடங்களும் கலந்து பேசியிருப்பீர்கள்.

அதனால் பத்திரிகையாளர்களில் நீங்கள் ஒருவர்தான் ஆசிரியர் சிவநாயகத்தை உள்ளும் புறமும் முழுமையாக அறிந்திருப்பீர்கள். அந்த வாய்ப்பு உங்களுக்கு மட்டும்தான் கிடைத்தது. பத்திரிகைத்துறை வித்தைகள் உட்படப் பல்வேறு விடயங்களையும் அவர் உங்களுக்குச் சொல்லித் தந்திருப்பார்.

ஆகவே அவரிடம் நீங்கள் கண்ட அருட்கொடைகள், குணவியல்புகள், நிறைகள், குறைகள், அதீத திறமைகள், உணர்வோட்டங்கள், உள்ளக்குமுறல்கள், அணுகுமுறைகள், ஆளுமை, அவர் ஒருகாலத்தில் அரசியலில் பிரவேசிக்க ஆவல் கொண்டிருந்தார் என்று சிலர் கதை அளந்து அவர் மீது களங்கம் கற்பிக்க முயன்றார்களே, அது பற்றிய உண்மைநிலை முதலானவற்றை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாமா? அது உங்கள் கடமை என்று நீங்கள் உணரவில்லையா? அவரைப்பற்றி நீங்கள் ஒன்றும் எழுதாமல் நன்றிகெட்டதனமாக நடந்து கொள்ளலாமா? இது முறையா? இது தகுமா?

ஆசிரியர் சிவநாயகத்துக்கும் எனக்கும் இறுதி வரை இருந்து வந்த தொடர்பை நன்கு அறிந்து வைத்திருந்த நண்பர்கள் இப்படி எல்லாம் கேட்டு என்னை நிலை குலைய வைத்துவிட்டார்கள்.

அவர்கள் கூறியவை அனைத்தும் உண்மை. மிகையல்ல. இனியும் இரகசியத்தை வெளியிடாமல் இருக்க முடியவில்லை .

பத்திரிகைத் துறைக்கு என்னை அழைத்தவர் ஆசிரியர் சிவநாயகம்

தன்னோடு வைத்திருந்து என்னை வளர்த்து எடுத்தவர் ஆசிரியர் சிவநாயகம்.

பத்திரிகைத்துறையில் என்னை நிலைக்க வைத்து, அதில் பெருமகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்தவர் ஆசிரியர் சிவநாயகம்.

தமிழ்ப் பத்திரிகைத் துறையில் அவர் அண்டப் பிரமாண்டமாக (Colossus) உயர்ந்து நிற்பவர்.

நான் அவரோடு எப்படிப் பழகியிருந்தாலும் அவர் என்னுடைய குரு.

அவரைக் குருவாகப் பெற்றது நான் செய்த பாக்கியம்.

பணம் படைத்த பல்லாயிரக்கணக்கான மேற்கு நாட்டுப் பக்கத்தவர்களின் குருவாக இருந்த ஒரு சுவாமி மீது எனது குருவுக்கு ஒரு நாட்டம் இருந்தது. அது வேறு ஒன்றுக்குமாக அல்ல, அந்தச் சுவாமியின் ஒரே ஒரு கொள்கைக்காக மட்டுமே.

அந்தச் சுவாமி வேறு யாருமல்லர். ரஜ்னீஷ் சுவாமியார்.

அமெரிக்காவில் தனிக் காலனி அமைத்து, எவ்வளவோ சொத்து சுகங்களுடன் டாம்பீகமாக இருந்தவர். அவருக்காக பக்தர்கள் எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள்.

கடைசியில் சுவாமியார் அரசாங்கத்திடம் மாட்டுப்பட்டுக் கொண்டார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அவருக்குக் கஷ்ட காலம். எல்லாவற்றையும் இழந்த நிலை. மரணம் அல்லது நாடு கடத்தல்தான் பாக்கி என்றாகிவிட்டது.

உண்மையான விசுவாசம் கொண்ட சிஷ்யா ஒருவர் குருவை அணுகினார். "குருவே! உங்கள் நினைவு உலகு உள்ளளவும் எல்லோர் உள்ளத்திலும் இருக்க வேண்டும். அதற்கு நிலையான காரியம் எதையாவது செய்ய வேண்டும் என்று மனது துடிக்கிறது, என்ன செய்யலாம்? கட்டளையிடுங்கள் சுவாமி!"- என்று சிஷ்யர் மன்றாடினார்.

ரஜ்னீஷ் சுவாமி அதைக் கேட்டு அந்தக் கஷ்ட வேளையிலும் சிரித்தார். சிரித்துவிட்டுச் சொன்னார்:

"ரஜ்னீஷ் என்று ஒருவன் உலகத்தில் இருந்தான் என்று எவரும் நினைக்க வேண்டாம். நினைக்க வைக்கும் கைங்கரியம் எதிலும் நீ ஈடுபடவும் வேண்டாம். எனக்கு அது போதும்."

அந்தக் குருவின் இந்த வாக்கு அந்த சிஷ்யருக்குப் பிடித்ததோ என்னவோ எனது குருவின் உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

நாம் இருவரும் தனியாக இருந்து தத்துவம் பேசும் போதெல்லாம் ஆசிரியர் சிவநாயகம் இதை என்னிடம் சொல்லுவார். சுவாமியார் எப்படிப்பட்டவராக இருந்தபோதிலும் அவருடைய இந்தக் கொள்கை எவ்வளவு பெரிய தத்துவக் கொள்கை என்று உயர்த்திப் பேசுவார். உலகில் எத்தனை பேர் இப்படியான அற்ப ஆசை இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று கேட்பார். ரஜ்னீஷ் சுவாமியின் அந்தக் கொள்கை தான் தன்னுடைய கொள்கையும் என்று பல தடவைகள் அவர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்.

மனிதன் தற்செயலாகப் பிறக்கிறான். எதையாவது செய்து தற்காலிகமாக வாழ்கிறான். நிச்சயமாக இறந்து போகிறான்.

மனிதன் தன்னுடைய தற்காலிக வாழ்வில் செய்தவை நல்லவையாகவும் பிறருக்குப் பயன்படத்தக்கவையாகவும் இருந்தால் அவை எவருடைய முயற்சியும் இல்லாமல் இயல்பாகவே நிலைக்கும். இது நியதி என்பதில் ஆசிரியர் சிவநாயகம் திடமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

அவர் தாம் நடத்திய பத்திரிகைகளில் பிற்காலத்தில் பெரியார்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் கட்டுரைகள் பிரசுரிப்பதைத் தவிர்த்து வந்தார்.

ஆசிரியர் சிவநாயகத்தை எத்தனையோ பாராட்டுகள், பட்டங்கள், விருதுகள் தேடி வந்தன. எதையும் அவர் ஏற்க மறுத்து விட்டார்.

இவையெல்லாம் அவருடைய தெளிந்த மனநிலையின் வெளிப்பாடுகள்.

மாதா, பிதா, குரு, தெய்வம், வணக்கத்துக்கு உரியவர்கள்; மதிக்கப்பட வேண்டியவர்கள்; மனநிறைவு பெறச் செய்யப்பட வேண்டியவர்கள்.

ஆசிரியர், சிவநாயகம் அன்று மட்டுமல்ல, இன்றும் என்னுடைய குரு. என்றைக்கும் அவர் என்னுடைய குருவேதான்.

அவரிடம் நான் பெற்ற நீண்டகால அனுபவத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள எனக்கும் ஆசைதான்.

அவருடைய அருமை, பெருமைகளை எழுதுவதானால் தொகுதி தொகுதியாக எத்தனையோ நூல்களை எழுதிக் குவிக்கலாம்.

என்ன செய்வது? குருநாதரின் கொள்கைக்கும் விருப்பத்துக்கும் மாறாக நடக்க மனம் இடம் தரவில்லை. நானே மாறாக நடந்தால் அவருடைய ஆத்மா சாந்தி அடையுமா? அவருடைய ஆத்ம சாந்திக்காக என்னை நான் கட்டுப்படுத்திக் கொண்டேன். என் கைகளைக் கட்டிக்கொண்டேன். என்னை அனைவரும் மன்னிக்க வேண்டுகிறேன்.

இப்படி நான் இரகசியத்தைப் புட்டு வைத்ததும் கேள்விக் குளவிகளின் கொட்டுதல் நின்று விட்டது. நன்றி கெட்டவன் நான் என்ற தோரணையில் ஏவப்பட்ட கணைகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன. என்னுடைய மனதை அழுத்திக் கொண்டிருந்த சுமை இறங்கியது.

- இப்படி குறிப்பிட்டிருக்கிறார் கே.கே.இரத்தினசிங்கம்.

அவர் 45 ஆண்டுகள் சிவநாயகம் ஐயாவுக்கு பக்கத்தில் மிக நெருக்கமாக வாழ்ந்தவர். அவருக்கு சொன்ன அந்த உபதேசத்தை எனக்கு சிவநாயகம் ஐயா என்றும் உரைக்கவில்லை. அதற்குக் காரணம் இருக்கலாம். இரத்தினசிங்கம் அவர்களைப் போல நான் சிவநாயகம் ஐயாவை நெருங்கவில்ல என்பது முழு உண்மை. எங்களுக்குள் (சிவநாயகம் ஐயாவுக்கும் எனக்கும்) தலைமுறை வேறுபாடு இருந்தது. குரு - சிஷ்யன் மிகுந்து மரியாதை இருந்தது. என் இளம் வயதில் சுமார் ஐந்து ஆண்டுகள் மட்டுமே அவருக்கு அருகில் இருந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனால் என்னவோ இத்தகைய தம்முடைய மனக் கிடக்கையை சிவநாயகம் ஐயா என்னிடம் பகிர்ந்து செல்லவில்லை. நெருங்கிப் பழகிய இரத்தினசிங்கம் அவர்களிடம் மட்டும் பகிர்ந்து சென்றிருக்கக் கூடும். அதனால், நிறைகுடமான இரத்தினசிங்கம் அமைதியாக இருந்து விட்டுப் போய்விட்டார். நான் குறைகுடம், அதனால் சிவநாயகம் ஐயா பற்றித் தொடர்ந்து எழுதி, அவருக்குப் பிடிக்காத விதத்தில் ஆரவாரம் பண்ணுகின்றேனோ என்னவோ? அதனை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

(வளரும்....)

# விசேட தேவையுடைய 12 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம்

விசேட தேவையுடைய மற்றும் நாள்பட்ட நோய்களினால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நாடளாவிய வேலைத்திட்டம் கொழும்பு றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டது.

விசேட தேவையுடைய பிள்ளைகள் மற்றும் நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கி கொரோனாத் தொற்றால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் மற்றும் மரண விகிதத்தைக் குறைக்கும் நோக்கில் 12 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு பைஸர் தடுப்பூசி வழங்கப்படுகிறது.

கொழும்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகள் மற்றும் நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகள் ஆகியோருக்கு இதன்போது தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் வாரம் முதல் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படும்.

விசேட தேவையுடைய மற்றும் நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தடுப்பூசி வழங்கும் போது சிறுவர் வைத்திய நிபுணர்களின் அனுமதியும், முழுமையான மேற்பார்வையும் சுகாதார அமைச்சால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல –

குறிப்பாக 12 முதல் 19 வயதுடைய பிள்ளைகளுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்கள், சுகாதார மற்றும் கல்வித் துறையின் அறிவுறுத்தல்களுக்கமைய விசேட தேவையுடைய பிள்ளைகள் மற்றும் நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு முதற்கட்டமாக தடுப்பூசி வழங்கப்படுகிறது.

இவ்வாறான குழந்தைகள் அதிகமாகக் காணப்படும் குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் இந்த தடுப்பூசி வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி இதற்கு முன்னதாக அறிவுறுத்தினார்.

அதற்கமைய சிறுவர் வைத்தியசாலையான றிட்ஜ்வே வைத்தியசாலையில் குறியீட்டு ரீதியாக இந்தத் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

விசேட தேவையுடைய மற்றும் நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு எதிர்காலத்தில் 12 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் பைஸர் தடுப்பூசி வழங்குவதற்கு நாம் ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். – எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்சய முணசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, சிறுவர் வைத்திய நிபுணர்களின் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாமன் ரஜிந்திரஜித், சிறுவர் வைத்திய நிபுணர்களின் நிறுவனத்தின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஹரியானா மாநிலத்துடன் இணைந்து கிழக்கில் பொருளாதார மேம்பாடு ஏற்பாடு



எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஹரியானா மாநிலத்துடன் இணைந்து பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக, ஹரியானா மாநில ஆளுநருடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் ஹரியானா மாநிலத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது ,ஹரியானா மாநில ஆளுநர் பண்டாரு தத்தாத்திரேயாவுடன் ஹரியானாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக மாநில ஆளுநர் பண்டாரு தத்தாத்திரேயாவுடன் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் இந்தியாவில் தொழில்துறையிலும், விவசாயத்திலும் முன்னணி மாநிலமாக ஹரியானா மாநிலம் திகழ்கிறது. கொவிட் – 19 தொற்று காலப்பகுதியிலும் கூட இத்துறைகளில் வளர்ச்சி மேல்நோக்கி சென்றுள்ளமை பாராட்டத்தக்கது.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் ஹரியானா மாநிலத்துடன் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் ஹரியானா மாநில ஆளுநர் பண்டாரு தத்தாத்திரேயா தனது ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குவேன் என உறுதியளித்தார்.

# இலங்கையின் பாடகி யோஹானிக்கு இந்தியாவில் மீண்டும் ஓர் அங்கீகாரம்

இந்தியாவிலும் உலகெங்கிலும் வைரலாகப் பரவிய 'மணிகே மகே ஹிதே' பாடலை பாடிய இலங்கைப் பாடகி யோஹானி, பிரபல இந்திய திறமை நிறுவனத்துடன் ஒப்பந்தமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது, விங்மேன் இந்திய கலைஞராக பிரத்யேகமாக பாடகி யோஹானி கையெழுத்திடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

விங்மேன் டேலண்ட் மேனேஜ்மென்ட் பொலிவுட்டின் மிகப் பெரிய பிரபலங்களை நிர்வகிக்கிறது. சோங்குலக்வானி விங்மேன் திறமை நிர்வாகத்தின் நிறுவுநர் ஆவார்.

மேலும் மணிகே மகே ஹிதே தற்போது உலக தரவரிசையில் முதல் 10 இடங்களில் உள்ளது.

இந்த வாரம் யூடியூப் உலக தரவரிசையில் இலங்கை பாடல் 7 வது இடத்தில் உள்ளது. இந்தப் பாடல் கடந்த வாரம் 6 வது இடத்தில் இருந்தது.

யூஹானி மற்றும் சதீனின் 'மணிகே மகே ஹிதே'



யூடியூபில் 11.9 கோடி பார்வைகளைப் பெற்றுள்ளது.

நடிகர் அமிதாப் பச்சன் இந்த பாடலின் ஹிந்தி பதிப்பிற்கு நடனமாடும் காணொலியை பகிர்ந்து இந்தியாவின் கவனத்தை ஈர்த்த பின்னர், இந்தப் பாடல் உலகம் முழுவதும் பிரபலமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் அநுராதபுரத்தில் இருவர் சாவு

அநுராதபுரம் – முரியாகல்ல பகுதியில் மிருக வேட்டைக்காக பயன்படுத்தப்படும் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 60 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். மேலும், சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது –

மூவர் குறித்த பகுதியில் சென்றுக்கொண்டிருந்த வேளையில், இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஊர்மக்களுக்கு அதனைத் தெரியப்படுத்துவதற்காகச் சென்ற மூன்றாவது நபர் மீது வேறு ஒரு கட்டுத் துப்பாக்கி வெடித்து அவரும் காயங்களுக்கு உள்ளாகினார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாட்டும் நானே? ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தகைய நுட்பமான செவி எனக்கு இல்லை! அதனாற்றான் கழற்றிப்பூட்டி வெண்பா ஆக்குகிறேன் என்ற பேரில் அதனை அசிங்கப்படுத்த நான் விரும்புவதில்லை. ஆனாலும் வெண்பாவில் தொனிக்கும் ஒரு கட்டளை ஓசை எனக்கு நிரம்பப் பிடிக்கிறது. சில விடயங்களைச் சொல்ல அது எனக்குத் தேவையாகவும் இருக்கிறது. அதனாற்றான் என் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவும், அதே நேரத்தில் வெண்பா இலக்கணத்தை மாசுபடுத்தாது இருக்கவும் வழிதேடி, வெண்பா என்று பெயரிடாமல் வெண்பா ஓசை வடிவம் மட்டும் கொண்ட கவிதைகளை எழுதுகிறேன். என்றைக்கு அசைகளுக்கிடையிலான தளைத் தொடர்பை என் செவி தானாய் விளங்குகிறதோ அன்றைக்கு வெண்பா எழுத முயற்சிப்பேன். அவ்வளவுதான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ யாரங்கே? இவ்வளவு நீண்ட பதில் எழுதும்படியான கேள்வியைக் கேட்டுக் கேட்டு நம்மை வருத்தியவரை உடனே தூக்கில் போடுங்கள்! ஹி....ஹி......ஹி.....**






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# மோடி – பைடன் வரலாற்று முக்கியத்துவச் சந்திப்பு



வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடி

வொஷிங்டன்,செப்.25

அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு நேற்று மாலை சென்ற இந்தியப் பிரதமர் மோடி அந்நாட்டு ஜனாதிபதி பைடனை சந்தித்து இருதரப்பு உறவுகள் பற்றி பேசினார்.

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் உருவாக்கப்பட்டுள்ள குவாட் என்னும் நாற்கர கூட்டமைப்பின் உச்சி மாநாடும் வாஷிங்டனில் நேற்று நடந்தது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விடுத்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி, அந்த நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். புதன் காலை 11 மணிக்கு டெல்லியில் இருந்து தனி விமானத்தில் அவர் அமெரிக்க தலைநகர் வொஷிங்டனுக்குப் புறப்பட்டார். வியாழன் காலை அவர் வொஷிங்டன் போய்ச் சேர்ந்தார்.

அவர் அங்குள்ள ஆண்ட்ரூ விமானப்படை தளத்தில் தரை இறங்கினார். அவரை அமெரிக்க அரசின் சார்பில் அந்த நாட்டின் வெளியுறவு துணைச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் வளங்கள்) பிரையன் மெக்கீன், இந்திய தூதர் தரண்ஜித் சிங் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சிகளுக்குப் பின் பிரதமர் மோடி அமெரிக்காவில் தனது அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளை தொடங்கினார். இதில் முதலாவதாக அமெரிக்காவை சேர்ந்த 5 உயர் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார்.


இதன்பின்னர், பிரதமர் நரேதந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மொரிஸனை இந்திய நேரப்படி இரவு 11 மணிக்கு சந்தித்து இருநாட்டு நல்லுறவு குறித்து விவாதித்தார்.

ஆஸ்திரேலிய பிரதமருடனான சந்திப்புக்கு பிறகு அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிசை பிரதமர் மோடி இந்திய நேரப்படி அதிகாலை 12.45 மணிக்கு சந்தித்துப்பேசினார்.

இதனை தொடர்ந்து, ஜப்பானிய பிரதமர் யோஷிஹிடே சுகாவையும் சந்தித்து பேசினார்.



வர்த்தக சமூகத்துடன் மோடி சந்திப்பு



'குவாட்' எனும் நாற்கரக் கூட்டமைப்பின் தலைவர்களான ஜப்பானியப் பிரதமர் ஜோஸிஹிடே சுகா, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிஸன் ஆகியோரின் சந்திப்பு.



மோடியுடன் நகைச்சுவையாய்ப் பேசும் ஜோ பைடன்

இந்த நிலையில், அமெரிக்காவின் விஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகைக்கு பிரதமர் மோடி தனி கார் ஒன்றில் நேற்றிரவு சென்று சேர்ந்தார். இரு நாட்டுத் தேசிய கொடிகளும் காரின் முகப்பில் பறந்து கொண்டிருந்தன.

அவரை வெள்ளை மாளிகை வாசலில் வரவேற்ற அதிகாரிகள் உள்ளே அழைத்து சென்றனர். இதன்பின்னர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்த பிரதமர் மோடி இருதரப்பு உறவுகள் பற்றி பேசினர்.

பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு வெள்ளை மாளிகை முன் திரண்டிருந்த இந்திய வம்சாவளியினர் இந்திய கொடியை உயர்த்தி பிடித்தபடி அவரை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

சந்திப்பின்போது ஜோ பைடன் "உலகளாவிய சவால்களை தீர்க்க அமெரிக்க – இந்தியா உறவு எங்களுக்கு உதவும் என்று நான் நீண்ட காலமாக நம்புகிறேன். உண்மையிலேயே 2020 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவும் அமெரிக்காவும் உலகின் மிக நெருக்கமான நாடுகளில் ஒன்றாக இருக்கும் என 2006 இல் நான் கூறியிருந்தேன்" என்றார்.

---

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தாம் தமது கூட்டமைப்பின் சகாக்களோடு ஐரோப்பிய ஒன்றியத்தினரைச் சந்திக்க விரும்புகின்றார் என்று சம்பந்தன் தெரிவித்தபோது அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம் தெரி வித்தது.

இந்த நிலையில்தான் இந்த வாரம் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவைச் சந்தித்தார் சம்பந்தன். சம்பந்தனை அல்லது சம்பந்தனையும் சுமந்திரனையும் அல்லது சுமந்திரனை மட்டுமாவது சந்திப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட அந்தக் கடிதத்தையும் காட்டி சம்பந்தன் அங்கு தகவல் வெளியிட்டார்.

"கூட்டமைப்பில் சந்திக்க விரும்புபவர்கள் வரலாம். எனது வீட்டில்தான் சந்திப்பு. நேரத்துடன் பெயரைத் தந்தால் நல்லது." – என்றார் சம்பந்தன்.

செல்வம் மட்டும் தான் வந்து கலந்து கொள்வார் என்றார். சித்தார்த்தன் அந்தக் கூட்டத்தில் இல்லாமையால் அவருக்குத் தகவல் கொடுக்கும்படி சுமந்திரனைப் பணித்தார் சம்பந்தன்.

தாமே மாவை சேனாதிராசாவுக்கு அழைப்பு எடுத்து சந்திப்புப் பற்றிய தகவலைச் சொன்னார் அவர். மாவை சேனாதிராசா தாம் கொழும்புக்கு வந்து கலந்து கொள்வார் என்று தெரிவித்திருக்கின்றார்.

– இவ்வளவும்தான் நடந்து. சம்பந்தனைச் சந்திப்பதற்கான அழைப்பில் செல்வமும் தொற்றிக் கொள்கிறார். அவ்வளவுதான்.

இதனை வைத்துக் கொண்டு தமிழர் தரப்பினர் எல்லோருக்குமான அழைப்பு தங்களுக்கு வந்திருப்பது போலவும், எல்லோரும் ஒன்றிணைந்து போய் சந்திப்போம் என்ற மாதிரியும் 'கயிறு' விட்டிருக்கின்றார் சுரேன் குருசாமி.

கூட்டமைப்புக்கு ஆப்பு வைப்பதற்காகத் தாங்கள் இப்போது புதுக் கூட்டு அமைத்திருக்கும் விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தா அணிக்கு ரெலோ தரப்பு விடும் 'கயிறு'தான் இது. பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டும் தந்திரோபாயமும் கூட.

அந்தப் புதுக் கூட்டுக்கும் ஒருபுறம் ஏற்பாடு செய்து கொண்டு, மறுபுறத்தில் கூட்டமைப்பாக சம்பந்தனுடனும் ஜாரி கட்டுவதை நியாயப்படுத்தும் ரெலோவின் சாணக்கியம்.

"நாங்கள் உங்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டிக் கொண்டு போய் – ஒன்றுபட்டு சந்திக்கத்தான் – விரும்பினோம். சம்பந்தன்தான் வெட்டிக்கொண்டு தனித்துப் போய் விட்டார்." – என்று பின்னர் பிலாக்கணம் பாடும் உபாயத்துக்கான முன்னேற்பாடு இது.

இப்படியான நரித்தந்திரங்களை நேரத்துடன் அம்பலப்படுத்தி குட்டை உடைப்பதால் எனக்குக் கெட்ட பெயர். பல பேருக்கு என் மீது காய்ச்சல். என்ன செய்வது நம் வேலை இப்படி நாரதர் பணியாகி விட்டதே...!

– மின்னல் –

---

## தமிழர் தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த ஆவணப்படத்தை சோமீதரன் இயக்கியுள்ளார். இந்த ஆவண பட திரையிடல் நிகழ்வைத் தொடர்ந்து 'இலங்கையின் இனஞ்சார்ந்த நில ஆக்கிரமிப்பு: முறைகள், விளைவுகள் மற்றும் தமிழ் நில பாதுகாப்பு' என்ற இணையவழி கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவில் 30 வருடங்களுக்கு மேலாக மக்களின் நில உரிமைகளுக்காக போராடும் செயற்பாட்டாளரான கலாநிதி மேதா பட்கார் அம்மையார், சென்னை பல்கலைக் கழக பேராசிரியர் ராமு மணிவண்ணன், அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டால் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். இந்த நிகழ்வில் இஸ்ரேல் நாட்டில் இருந்து பேராசிரியர் ஓரன் யிப்டசெல் அவர்கள் முதன்மை உரை ஆற்றுவார்.

இந்தக் குழு விவாதத்தைத் தொடர்ந்து ஈழத்தை பூர்வீகமாகக் கொண்ட கனடாவின் புகழ்பெற்ற இசைக் கலைஞரானான் வின்சென்ட் டி போலின் இசை நிகழ்வு ஒன்று 20 நிமிடங்களுக்கு இடம்பெறும்.

ஆவணப் படம் திரையிட்ட பின்னர், அந்தப் படம் தொடர்பான ஆய்வு ரீதியான கலந்துரையாடல் ஒன்றில் இளையோர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் பிரித்தானியா, தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் இருந்து இளையோர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்த நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனுடன் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கூட்டாக ஆரம்பித்துவைப்பார்.

தாய்நிலம் என்ற இந்த ஆவண படத்தை தமிழ் மக்கள் அனைவரும் அவசியம் பார்க்கவேண்டும் என்றும், அதன்பின்னர் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவேண்டும் என்றும், இந்த நிகழ்வையும் ஆவணப் பட வெளியீட்டையும் ஏற்பாடு செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று சனிக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 5.30 மணிமுதல் சில மணி நேரங்களுக்கு உங்கள் நேரத்தை தயவுசெய்து ஒதுக்கிவைத்து இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பொறுப்புக் கூறலை வலியுறுத்துகிறார் மாவை

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க முன்வந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவர்கள் மரணிப்பதற்கு காரணமானவர்கள் தொடர்பிலும் பொறுப்புக்கூற வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், உள்ளக பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பது ஏமாற்ற மளிக்கும் விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் மேலும் 47 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 47 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் 13

# கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமையை அவமதித்த யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் திட்டவட்டம்

(இ.கலையமுதன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலிடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே அஞ்சலி செலுத்த முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப் படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். கஜேந்திரனின் நாடாளுமன்ற சிறப்புரிமையை அவமதித்த யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் வியாழன் சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று அவரது கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடா வருடம் குடும்பத்தோடு அமைதியாக 13



# அரசுடன் நேரடிப் பேச்சுக்கு செல்பவர்கள் துரோகிகள்!



## சீறுகின்றார் சிவாஜிலிங்கம்

(இ.கலையமுதன்)

**அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேசச் செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு செல்பவர்களை நாங்கள் துரோகிகளாக அறிவிப்போம்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்**

**யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறையிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

13

# இறக்குமதி கட்டுப்பாடுள்ள பொருள்களுடன் இந்தியாவிலிருந்து வந்த 30 பேர் சிக்கினர்!

இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பொருள்கள் சிலவற்றை இலங்கைக்குக் கொண்டு வந்த 30 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 13

# 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்கத் தகுதி!

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் ஜி.சீ.ஈ. உயர்தரத்துக்குத் தெரிவாகியுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடநெறிக்கான செயன்முறைப் 13

# ஊரடங்கு நீங்கியதும் பாடசாலைகள் நான்கு கட்டங்களாக மீண்டும் ஆரம்பம்

## கல்வி அமைச்சு உத்தியோகபூர்வ அறிவிப்பு



நாட்டில் நான்கு கட்டங்களாகப் பாடசாலைகளை மீளத் தொடங்கத் தயாராகி வருவதாகக் கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டதன் பின்னர், சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கு அமைய, முறையான திட்டங்களுடன் பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். 13

# வவுனியாவில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 5 வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தல்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்டதாக பிரபல சுப்பர் மாக்கட் உட்பட 5 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

வவுனியாவில் கொரோனாப் பரவல் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படல் மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது செயற்படல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர். 13

# சட்டவிதிகளை மீறிய மேலும் 418 பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய மேலும் 418 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 48 வாகனங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரையான 13

## அரசுடன் நேரடிப் பேச்சுக்கு ..........

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றியுள்ளார். இலங்கையில் ஆட்சித் தலைவர்களாக இருப்பவர்கள் சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாகவே உள்ளது.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய பொதுச்செயலாளர் பான் கீ- மூன் இலங்கைக்கு வந்து முள்ளிவாய்க்கால் பகுதியைப் பார்த்த பின்னர் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தார்.

தமிழர் நலன்சார் விடயங்கள் தொடர்பில் இந்தியாவுக்குப் பலவற்றை ராஜபக்ஷவினர் சொன்னார்கள். ஆனால், இதுவரை எவையும் நிறைவேற்றப்படவில்லை. 13 பிளஸ் என்றார்கள். ஆனால், 13வது திருத்தமே சந்தேகமாக உள்ளது.

குற்றவாளியே எவ்வாறு நீதிபதியை நியமிக்க முடியும்? சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் சர்வதேசப் பொறிமுறை ஊடாகவே நீதி கிடைக்கும். அதன்மூலமே வடக்கு கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் நமக்கான பரிகாரம் கிடைக்கும்.

ஒரு நாட்டினுடைய மத்தியஸ்தத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது மூன்றாம் தரப்பு இல்லாமல் யாரும் பேச முடியாது. புலம்பெயர்ந்த அமைப்புக்களாக இருக்கட்டும். தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கட்டும். சர்வதேச மத்தியஸ்த குழு ஒன்றை வைத்தே அரசுடன் பேச வேண்டும். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது.

எங்களுடைய மக்கள் சார்பில் யாரும் தன்னிச்சையாக எந்த வெளிநாட்டு அமைப்பாக இருந்தாலும் உள்நாட்டில் இருக்கக்கூடிய கட்சியோ கூட்டணியோ பேச முடியாது. அதை நாங்கள் தெட்டத் தெளிவாகக் கூறிக்கொள்கின்றோம்.

சர்வதேச மத்தியஸ்தத்துடன் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். அரசனை நம்பி புருஷனைக் கைவிடுவதைப் போல் மீண்டும் மீண்டும் இலங்கை அரசை நம்பி ஏமாறுவோமாக இருந்தால் எங்களை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது.

இருக்கின்ற பிரச்சினைகளை நீர்த்துப் போகச் செய்கின்ற நிகழ்ச்சி நிரலே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக நீதி கிடைப்பதற்கான அரசியல் தீர்வை நோக்கி நாம் முன் நகரவேண்டும்.

உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை புலம்பெயர் தமிழர்களிடமும் தொப்புள் கொடி உறவுகளான தாய்த் தமிழக மக்களிடமும் தாயகத்தில் உள்ள மக்களிடமும் மிகவும் பணிவாகக் கேட்க விரும்புவது, இந்தச் சந்தர்ப்பத்திலே அரசை நம்பி நாங்கள் நேரடியாகப் பேச்சுக்குச் செல்வதென்பது தற்கொலைக்குச் சமமாகும். அதனை நாம் அனுமதிக்கமாட்டோம். அவ்வாறு செல்பவர்களை நாங்கள் துரோகிகளாக அறிவிப்போம் - என்றார்.

## கஜேந்திரன் எம்.பியின் ...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்துவார். அதுபோல் இம்முறையும் கடந்த நாள்களாக அஞ்சலி செலுத்தி வந்தார்.

ஆனால், வியாழன் அஞ்சலி செலுத்த முயன்றபோது அங்கிருந்த பொலிஸார் தடுத்தனர். எதற்காகத் தடுக்கிறீர்கள்? நீதிமன்ற தடை உத்தரவு உள்ளதா? என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினவினார். எனினும், பொலிஸார் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவு கூர முடியாது எனக் கூறியே அவ்விடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைக் கைதுசெய்தனர்.

எனினும், கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டு விடுவிக்கும் நேரத்தில் நினைவுகூர்வது தவறு என நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைதுசெய்தோம் என்று பொலிஸார் கூறினர்.

கஜேந்திரன் எம்.பி. அவ்விடத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே நினைவேந்தல் செய்ய முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். அராஜகமாக கஜேந்திரனின் உடலைப் பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

அவர் கைது செய்யப்பட்டதை அறிந்து அவ்விடத்துக்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர்.

கொரோனா விதிமுறைகளை மீறினார் என கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டிருந்தால் அவர் அந்த நினைவிடத்துக்குச் சென்றபோதே கைதுசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஏன் கற்பூரம் ஏற்றி நினைவேந்தல் செய்ய முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டார்?

கஜேந்திரன் எம்.பியைக் கைது செய்தமைக்கு கொரோனா விதிமுறைகள் காரணமல்ல நினைவேந்தல் செய்தமையே காரணம் எனத் தெரிகின்றது. ஏனெனில் நினைவேந்தல் மேற்கொண்ட இடத்தில் கஜேந்திரன் எம்.பி. மாத்திரம் இருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் இருந்தார்கள். திலீபனின் நினைவிடத்தில் பொலிஸார் வந்ததை அறிந்ததும் பல பொதுமக்களும் கூடினார்கள்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் எம்.பி. மீது நடவடிக்கை எடுத்திருந்தார்கள் எனில் ஏன் அங்கு கூடிய மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. உண்மையில் கஜேந்திரன் எம்.பி. சுகாதார விதிமுறைகளை மீறவில்லை. அவர் நினைவேந்தல் மேற்கொண்டமைக்காவே கைதுசெய்யப்பட்டார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். எதிர்வரும் 27 ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளைப் பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்கும் தெரியாமல் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம்.

ஐ.நா. அமர்வுகள் நடைபெறுகின்ற நிலையில் கூட பொலிஸார் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். கஜேந்திரனை கண்ணியமாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாது கற்பூரம் கொளுத்தும்போதே பொலிஸார் நினைவேந்தலைத் தடுக்கும் முகமாக செயற்பட்டனர்.

தமிழ்த் தேசத்து மக்களின் உரிமைகள் தொடர்பில் இந்த அரசு கொடுக்கும் எந்தவொரு வாக்குறுதியையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாகக் கூறுகின்றோம் - என்றார்.

## ஊரடங்கு நீங்கியதும் ....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் கட்டமாக 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 5 ஆயிரத்து 131 பாடசாலைகளையும் மற்றும் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்ட 3 ஆயிரத்து 784 பாடசாலைகளையும் ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் அதிகாரிகளால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் இரண்டு வாரங்களில், கல்வி துறைசார் அதிகாரிகள் தமக்குப் பொறுப்பான கல்வி வலயங்களில் சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கு ஏற்ப பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்த சாத்தியக்கூறுகளை ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## வவுனியாவில் மேலும்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக கொரோனாத் தொற்று 47 நபர்களுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(100)

## இறக்குமதி .....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா சென்று நாடு திரும்பிய கொழும்பைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சுநந்த சில்வா தெரிவித்தார்.

இதன்போது, சுங்கத்தால் கைப்பற்றப்பட்டுள்ள பொருள்களின் பெறுமதி 40 லட்சத்துக்கும் அதிகம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தேகநபர்கள் 472 கிலோகிராம் மஞ்சள், 352 கிலோகிராம் ஏலக்காய் மற்றும் மருந்துப்பொருள்களை தமது பொதிகளில் மறைத்து வைத்து கொண்டு வந்துள்ளனர் என்றும் சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## 2 லட்சத்து 36 .......

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் இடம்பெறாததால், அந்த விடயதானம் இன்றியே பெறுபேறு வெளியிடப்பட்டது.

இதன்படி மேற்படி செயன்முறைப் பரீட்சை பெறுபேறுகள் இன்றி 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 பேர் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பாடசாலைகள் ஆரம்பமானதும், செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, அதன் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## வவுனியாவில் ஊரடங்குச்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மக்களை ஒன்றுகூட்டி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டன.

அந்தவகையில், மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கட், தர்மலிங்கம் வீதியில் இலத்திரனியல் விற்பனை நிலையம், குருமன்காடு பகுதியில் சுப்பர் மார்க்கட் ஒன்று, ஹொரவப்பொத்தானை வீதியில் இரு வர்த்தக நிலையங்கள் என 5 வர்த்தக நிலையங்கள் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டன. (100)

## சட்டவிதிகளை மீறிய ....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 77 ஆயிரத்து 543 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



## மாங்குளம் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உங்கள் ஆதரவாளர்களும் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குள் 24.09.2021 தொடக்கம் 28.09.2021 வரையான காலப்பகுதிக்குள் மேற்படி இராசையா பார்த்தீபன் அல்லது திலீபன் தொடர்பான எந்தவொரு நினைவுகூரலையும் மேற்கொள்ளக்கூடாது என்ற தடைக்கட்டளையை குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 106 இற்கு அமைவாக பிறப்பிக்கின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடைக் கட்டளையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் திலகநாதன் சிந்துயன், ரகுநாதன் துஷ்யந்தன், புன்சிதபாதம் ரவீந்திரன் (ரவி மாஸ்டர்), ராசமணி சிவராசா, மகாதேவன் ரூப்பானந் ஆகிய 7 பேரினது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (100)

## தமிழர் தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோள்களில் இருக்கிறது. அகத்திலும் புலத்திலும் இருக்கும் நம் இனத்தை ஒன்றுபடுத்தி, ஒரு தேசிய இனமாகக் கட்டியமைக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இன்று இருக்கிறோம். எமது நீண்டகால – குறுகிய கால – இலக்குகளை ஒன்றோடு ஒன்று முரண்படுத்தி குழப்பிக் கொள்ளாமல், வரையறுத்து பயணிக்கக் காலம் பணித்துள்ளது. இதனடிப்படையில் தமிழ்த் தேசிய பரப்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து தமிழ் தலைமைகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்படுவது எமது இலக்குகளைக் கட்டம் கட்டமாகவும் நேர்த்தியாகவும் சென்றடைய வழிவகுக்கும். இதற்கு உதாரணமாக திகழும், பல நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியமானது, தமிழர் நலன் சார்பான ஒருமித்த செயல்பாட்டை முன்னெடுக்கும் தருணத்தில் தமிழர் தரப்பாகிய நாம் ஒருமித்து செயலாற்றுவது காலத்தின் கட்டாயம்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை சம்பந்தமான களநிலை ஆராய்வு மற்றும் கலந்துரையாடலுக்கு இலங்கை வர இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தோடு முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு அப்பால் தமிழர் தரப்போடும் கலந்துரையாடுவதற்கு ஆயத்தமாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பிரேரணையை இலங்கை அரசு நிராகரித்திருந்தது. இதை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் அவதானத்தில் எடுத்திருந்தது. அதன் பிரதிபலிப்பாக கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை நீக்கும் வரைக்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதை தடைசெய்வதை பரிசீலனை செய்ய தீர்மானித்துள்ளது. இந்த முடிவு நடைமுறைப் படுத்தப்பட்டால் இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் தற்போதுள்ள அரசாங்கத்தின் ஆட்சியில் இதன் தாக்கத்தை நாடு அனுபவித்து இருந்தது. இதிலிருந்து மீளும் முகமாக இலங்கை அரசு ஐ.நாவின் பரிந்துரைகளை கருத்தில் கொள்வதாக குரல் கொடுக்கிறது.

சர்வதேச அழுத்தங்கள், ஐ.நா. தீர்மானம் என்பனவற்றிற்கு மேலாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நிலைப்பாடு இலங்கையை இறுக்கமான பிடிக்குள் கொண்டுவந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் நீக்குவது என்பது பல்லாண்டு காலம் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் எமது அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு வழிவகுக்கும். ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழர் தரப்பினர் தமது ஆதரவினை ஒருமித்த நிலைப்பாட்டில் விரைந்து செயலாற்றுவது எம்மினத்தின் அவசியமாக உள்ளதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த வருகையிலாவது, தமிழர் தரப்பு தமக்குள் இருக்கும் பல கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருமித்த நிலைப்பாட்டில் எங்கள் ஆதரவை அவர்கள் முன்னெடுப்புக்கு தெரிவிப்பது காலத்தின் அவசியம்.

மேலும் நம் தாயகப் பரப்பில் எமது இனம் முகம் கொடுத்து நிற்கும் இலங்கை அரசின் திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கையாக காணி அபகரிப்பு, குடியேற்றம் மற்றும் இராணுவ மயமாக்கல் ஆகிய விடயங்களையும் ஒருமித்து ஐரோப்பிய பிரநிதிகளின் கவனத்திற்கு கொண்டுவர இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த எமது முயற்சிக்கு ஒன்றிணையுமாறு அனைத்து தமிழ் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறோம். – என்று உள்ளது.

## வடக்கு- கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளச் செய்யும் சந்திப்புகளை நடத்துவதில், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் முயற்சியோடு மதத்தலைவர்களும் இணைந்து ஊக்குவித்தோம். சில கூட்டங்களைத் தலைமையேற்றும் நடத்தியிருந்தோம்.

சமீபத்தைய நாள்களில் மீண்டும் இதைப் போன்ற ஒரு வரலாற்றுத் தேவை எழுந்திருப்பதாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் எம்மைத் தொடர்பு கொண்டு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் சிக்கல்கள் எழும்போது, அவற்றைத் தீர்த்துவைக்கவென மீண்டும் மீண்டும் புதிதாக முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரு பொதுவான மாற்றீட்டு அணுகுமுறையை வகுத்துக்கொள்வதை ஆராய்ந்து செயற்படுத்துவதே பொருத்தமாகத் தெரிகிறது.

இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதில் முதற்கட்டமாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் கருத்துகளைப் பெற்று, அவற்றைப் பரிசீலித்து, அடுத்தகட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாகவும் கூட்டாகவும் கலந்துரையாடி, தக்க வழி ஒன்றை வகுக்க ஆவன செய்வதற்காகப் பூர்வாங்கச் செயற்குழு ஒன்றை எமது மேற்பார்வையில் உருவாக்கி வருகின்றோம்.

வடக்கு – கிழக்கு இணைந்து மேற்கொள்ளும் இம்முயற்சியில் சட்டத்துறை சார்ந்த இளந்தலைமுறையோடு, சிவில் சமூக மற்றும் மரபுரிமைச் செயற்பாடுகளில் இயங்கிய அனுபவம் கொண்டவர்களும், ஊடக அமையங்களை ஸ்தாபித்துச் செயற்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களுமாக, எந்தவித அரசியல் கட்சிப் பின்னணியும் இல்லாத ஐவர் இணைக்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, இவர்கள் கல்வி மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடல்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூர்வாங்கக் குழுவின் பொதுத் தொடர்பை சட்டத்துறை சார்ந்த மூவர் கையாள்வது பொருத்தம் என்ற அடிப்படையிலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு இவ்வாறான முயற்சிகளுக்கு அவசியம் என்ற நோக்கோடும், மேலும் இரண்டு சட்டத்தரணிகள், இயன்றவரை பால், மத, மற்றும் பிரதேச சமத்துவத்துடன் இணைக்கப்பட்டு பொதுத்தொடர்பைக் கையாளவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். செயற்குழு மற்றும் பொதுத்தொடர்பில் பங்கேற்பவர்களின் விபரங்களை, ஆரம்பக் கலந்துரையாடல்கள் முடிவடைந்ததும் வெளிப்படைத்தன்மையோடு அறியத்தரும் பணியை மன்னாரைச் சேர்ந்த அ. அன்ரனி றொமோள்சன் எனும் சட்டத்தரணியிடம் கையளித்திருக்கிறோம்.

இந்தக் குழுவில் இணைந்து கொள்ளவும், ஆலோசனைகளை வழங்கவும், இம் முயற்சியை ஊக்குவித்துச் செயற்படவும் விரும்புவோர் participatetamildemocracy.org என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தமது தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். கல்வித்துறை, சட்டத்துறை, மனித உரிமை, ஊடகத்துறை மற்றும் இதர சமூகப் பரப்புகளில் இருந்து கருத்துக்களை உள்வாங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரோடும் கலந்தாலோசித்து, உகந்த ஒரு பொறிமுறையை வகுக்கும் பணியை முன்னெடுக்கவேண்டும் என்ற நல்லாசியுடன் இம் முயற்சியை ஆரம்பித்து வைப்பதில் மனநிறைவடைகின்றோம். அனைவரின் ஆதரவும் இம்முயற்சிக்குக் கிட்ட இறையருளை வேண்டி நிற்கின்றோம் – என்றுள்ளது.

# கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவருக்குக் கொரோனா

கிளிநொச்சியில் உயிரிழந்த முதியவர் ஒருவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த சின்னத்துரை மகாலிங்கம் (வயது 73) என்ற முதியவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது குறித்த முதியவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளை மாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜோ பைடனை நேற்று சந்தித்து இருதரப்பு உறவுகள் பற்றிப் பேசினார். (விரிவான செய்தி 11ஆம் பக்கத்தில்)

## மன்னாரில் திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பவரே குறித்த நினைவேந்தலை மேற்கொள்ளவுள்ளார் எனக் கூறி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தநிலையில் சிவகரனை நேற்று மதியம் 1.30 மணியளவில் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய வி.எஸ் சிவகரன் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

சிவகரன் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.சிராய்வா மற்றும் சட்டத்தரணி அன்ரனி றொமோசன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணிகள் தமது சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

மன்னார் பொலிஸார் தாக்கல் செய்தது போல் மக்களை ஒன்று சேர்த்து நினைவேந்தலை நடத்த எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும், பொலிஸார் கற்பனையில் பொய்யான வழக்கை மன்றில் தாக்கல் செய்துள்ளனர் எனவும் சட்டத்தரணிகள் தமது சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

புலனாய்வுத்துறையினரின் தகவலுக்கு அமைவாக என்ன சான்றுடன் குறித்த வழக்கை பொலிஸார் மன்றில் தாக்கல் செய்துள்ளனர் எனவும், பொலிஸார் மன்றில் தெரிவித்தது போல் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்றுகூட்டுவதற்கான முயற்சிகளும் இடம்பெறவில்லை எனவும், எனவே பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதன்போது விசாரனைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

சிவகரன் என்பவர் நாளை 26ஆம் திகதி நித்திலம் பதிப்பகத்தில் மக்களை ஒன்றுகூட்டி எவ்வித ஒன்றுகூடலையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.

பொலிஸாரின் வேண்டுகையை ஏற்க மறுத்த நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறியதுடன் எதிர்வரும் முதலாம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தது.

## மேலும் 82 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 530 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 82 பேரில் 31 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 16 ஆண்கள், 5 பெண்கள் என 21பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 61 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 35 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர்.

## ‘செப்.11 தாக்குதல்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியவற்றை இலக்கு வைத்து தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76 ஆவது கூட்டத் தொடரையொட்டி, ஐக்கிய நாடுகள் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகம் மற்றும் செப்டெம்பர் 11 நினைவு அருங்காட்சியகம் ஆகியன இணைந்து, இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு விஜயம் செய்துள்ள உலக நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் மேற்படி தாக்குதல்களால் உயிரிழந்தவர்களுக்கு கௌரவமளிக்கும் வகையில், நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 372 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 950 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 52 ஆயிரத்து 692 ஆக உயர்வடைந்துள்ளது.

## அராலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அராலி மத்தியில் வசிக்கும் நபர் ஒருவர் தனது குடும்பத்தினருடன் பஸ்ஸில் செல்லும்போது பஸ் அரச மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அறுவர் பயணித்த நிலையில் ஒருவர் படுகாயமடைந்தமையுடன் மற்றைய இருவர் சாதாரண காயங்களுக்குள் ளாகினர்.

காயமடைந்த மூவரும் 1990 இலக்க அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.